# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை (18-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:355


✪ அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு ✪ ஓய்வூதியக்காரர்களுக்கு கூடுதல் கொடுப்பனவு
✪ விவசாயிகளுக்கு உரமானியம் ✪ படையினருக்கு நியாயமான சம்பள அதிகரிப்பு

# நாளைய வரவு – செலவுத் திட்டம் வறுமை ஒழிப்புக்கு வழிவகுக்கும்!

## நிதி அமைச்சர் சொக்ஸி கூறுகிறார்

கொழும்பு,நவ.18

நாளை சமர்ப்பிக்கப்படவுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வரவு - செலவுத்திட்டம் வறுமை ஒழிப்புக்கு வழிவகுப்பதாக இருக்கும். இதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படும் என்று நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி கூறினார்.

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, ஓய்வூதியக்காரர்களுக்கு கூடுதல் கொடுப்பனவு, விவசாயிகளுக்கு உரமானியம், தொழில்வாய்ப்புகள், சுயதொழில் முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு என்று பல நன்மைகள் அறிவிக்கப்படவுள்ளன என்றும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை நிதியமைச்சில் அமைச்சர் சொக்ஸி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

தான் நிதியமைச்சுப் பதவியை ஏற்றபோது திறைசேரியின் நிதி நிலைமை சுத்த சூனியமாகவே இருந்தது எனவும், பிரதமர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் பாரிய முன்னேற்றம் அடைந்திருப்பதையும் சுட்டிக்காட்டிய நிதியமைச்சர் மேலும் கூறியதாவது:-

கடந்த இரண்டு வருடங்களாக நாட்டு மக்களுக்கு நேரடியான நன்மைகள் எதுவும் கிட்டவில்லை. ஆனால், மக்களின் அர்ப்பணிப்புக்களுடன் நாட்டின் பொருளாதாரம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

இதனால் இம்முறை நாம் சமர்ப்பிக்கும் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கும் பொலீஸார் உட்பட பாதுகாப்புப் படையினருக்கும் நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படும். காலம் காலமாக பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டிருந்த ஓய்வூதியக்காரர்களுக்கும் ஏககாலத்தில் ஓய்வூதியம் அதிகரிக்கப்படும்.

விவசாயிகளுக்கு உரமானியத்துடன் பல்வேறு நிவாரணங்கள் அறிவிக்கப்படும். தொழில்வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் அதேவேளை, சுய தொழில் முயற்சிகள், முதலீட்டாளர்களுக்கான ஊக்குவிப்புக்கள் என்ப

(02.ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சி பற்றி விளக்க சொல்ஹெய்ம் இந்தியா சென்றார்

புதுடில்லி,நவ.18

இலங்கை சமாதான முயற்சியில் நோர்வேயின் விசேட தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் இந்திய விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். சமாதான முயற்சியின் இன்றைய நிலை குறித்து இந்தியத் தலைவர்களிடம் விளக்கிக் கூறவே அவர் இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை சமாதான முயற்சியை நோர்வே அரசு இடைநிறுத்திய பின்னர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் விஜயம் இது என்பதால் அது முக்கியத்துவம்வாய்ந்ததாக அமைகின்றது.

"நாம் விலகிச் செல்லவில்லை. இலங்கை ஜனாதிபதி, பிரதமர், விடு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் அழைப்பை ஆனந்தசங்கரி நிராகரிப்பு!

கொழும்பு,நவ.18

ஜனாதிபதி இன்று சந்திக்க நேரில் வரும்படி தனக்கு அழைப்பு விடுத்துள்ளபோதும் தற்போதைய அரசியல் நிலைமையில் அவ்வாறான ஒரு சந்திப்பு மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் அச்சந்திப்பை தான் தவிர்த்துள்ளார் என்று ஆனந்தசங்கரி எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி அன்றும், கடந்த 7ஆம் திகதி அன்றும் என்னால் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதத்தின் பிரகாரம் இன்று செவ்வாய்கிழமை மலை 4 மணிக்கு நேரில் சந்திக்கும்படி அவசர கடிதம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சின் செலவுக்கு திறைசேரி பணம் கொடுக்க மறுப்பு!

கொழும்பு,நவ.18

பாதுகாப்பு அமைச்சுக்குத் தேவையான எரிபொருளை வாங்குவதற்குரிய நிதியை வழங்குமாறு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் விடுத்த வேண்டுகோளை திறைசேரி நிராகரித்திருக்கின்றது.

நிதி தொடர்பான கோரிக்கையை விடுக்கும்போது, அது தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்கவேண்டுமென திறைசேரியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி தொடர்பான கோரிக்கைகள் பல தடவைகள் விடுக்கப்பட்டபோதும், அது தொடர்பாகச் சாதகமாகப் பதிலளிக்க திறைசேரி மறுத்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயை வெளியேற்ற ஜனாதிபதி திட்டமிட்ட சதி!

### சமாதான முயற்சிக்கும் வேட்டு குற்றஞ்சாட்டுகிறார் ஜீ.எல்.பீரிஸ்



கொழும்பு,நவம்பர்.18

**தனது கட்சி அரசு காலத்திலேயே இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிக்கு நோர்வே அரசை அழைத்ததாகக் கூறிக்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே சமாதான அனுசரணையாளர்கள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், கண்காணிப்புக் குழுவினர், நோர்வே தூதுவர் என்று எவரையும் விட்டுவைக்காமல் இன்று குற்றஞ்சாட்டுகிறார். இவ்வாறான நிலையில் நோர்வே தரப்பினர் ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்து சமாதானப் பணிகளை மீண்டும் தொடங்குவார்களா?, என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கேள்வி எழுப்புகிறார்.**

கொழும்பு, கிராமோதய மண்டபத்தில் நேற்று முற்பகல் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா மீது அடுக்கடுக்காக குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய போதே அமைச்சர் பீரிஸ் இவற்றைத் தெரிவித்தார்.

பிரதமர் நாட்டில் இல்லாதவேளையில் முக்கிய மூன்று அமைச்சுக்களை தன்னிச்சையாகப் பறித்து நாடாளுமன்றத் தொடரையும் இடைநிறுத்திய ஜனாதிபதி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் சமாதான முன்னெடுப்புக்களுக்கும் பாரிய முட்டுக்கட்டைகளைப் போட்டுவிட்டார். பிரதமரின் சமாதானப் பணியை குழப்பியடிப்பதே ஜனாதிபதியின் நோக்கம் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் கூறியதாவது:-

அரசும் - புலிகளும் முன்வைத்துள்ள ஆலோசனை வரைவுகளில் காணப்படும் இடைவெளிகளை நிரப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியின் செயற்குழு ஜே.வி.பி. கூட்டுக்கு இணக்கம்

நேற்று மாலை கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு ஜே.வி.பியுடன் கூட்டமைப்பதற்கு இணக்கம் காட்டியிருப்பதாக தெரியவருகின்றது.

செயற்குழுக் கூட்டத்தில் பெரும்பாலானோர் ஜே.வி.பியுடன் கூட்டமைப்பதற்கு ஆதரவாக கருத்து வெளியிட்டதை அடுத்து அது குறித்து ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுப்பதற்காக நான்கு பேர் கொண்ட உபகுழு ஒன்றை செயற்குழு தெரிவுசெய்தது.

இந்த உபகுழு நாளைமறுதினம் கூடி மேல் நடவடிக்கைகளை எடுக்கும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் கட்சியின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(16ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைச்சாவடியில் மாவை எம்.பி. மறித்துத் திருப்பி அனுப்பப்பட்டார்!

### சம்பவத்தைக் கண்டித்து ஜனாதிபதிக்கு அவர் கடிதம்



யாழ்ப்பாணம்,நவ.18

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றுக்குச் செல்ல கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கு படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

இந்த சுகாதார நிலையங்களின் தேவைகள் அறிவதற்காக மாவை சேனாதிராசா தலைமையிலான குழு ஒன்று அங்கு செல்வதற்காக நேற்றுக் காலை 10 மணிக்கு தெல்லிப்பழை சோதனைச்சாவடிக்குச் சென்றுள்ளது.

இவருடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமகாராசா, சட்டத்தரணி வி.எஸ்.கணேசலிங்கம் ஆகியோர் சென்றிருந்தனர்.

தெல்லிப்பழை சோதனைச்சாவடியில் வைத்து, தாம் நாடாளுமன்ற உறுப்பினர் என அறிமுகம் செய்த மாவை சேனாதிராஜா, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, சுகாதார வைத்திய நிலையம் ஆகியவற்றுக்குச் செல்ல அனுமதிக்கும்படி கோரினார்.

அங்கு செல்ல அனுமதிக்கமுடியாது எனப் படையினர் தெரிவித்ததையடுத்து மாவை சேனாதிராஜா தமது முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினார்.

இந்தச் செயலைக் கண்டித்து மாவை சேனாதிராஜா, ஜனாதிபதிக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலி உறுப்பினர் பஸ்ஸில் வைத்துக் கைது!

### கல்முனையில் பதற்றம்

கல்முனையில் பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் என்று கூறப்படும் ஒருவர் நேற்றிரவு பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அப்போது அருகிலிருந்த சிலர் ஆத்திரமுற்று பொலீஸ் ஜீப் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றனர் எனக் கல்முனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

கல்முனையிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற பஸ் ஒன்றை சந்தேகத்தின் பேரில் வழிமறித்த பொலீஸார் அதில் பயணம் செய்த

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஜனாதிபதி-பிரதமர்-கட்சித் தலைவர்கள் நெருக்கடி குறித்து இன்று முக்கிய சந்திப்பு

## பாதுகாப்புத் தொடர்பான பிரான்ஸ் முறை ஆராயப்படலாம்

கொழும்பு,நவ.18

நாட்டில் தொடர்ந்து வரும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் மற்றொரு முயற்சியாக ஜனாதிபதி, பிரதமர், அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருக்கிடையிலான முக்கிய சந்திப்பு இன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும்.

கடந்த 12ஆம் திகதி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டவாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்களும் இன்றைய சந்திப்பில் கலந்து கொள்கின்றனர்.

மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்றுக்கொண்டதை அடுத்து உருவான நெருக்கடிக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும் என்பது ஐ.தே. முன்னணி அரசின் நிலைப்பாடாகும்.

இந்த நெருக்கடிக்குத் தீர்வு காணும் முயற்சியாக பிரான்ஸில் இருந்துவரும் ஒரு திட்டம் குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

பிரான்ஸின் அரசமைப்பு முறைப்படி ஜனாதிபதி ஒரு கட்சியையும் பிரதமர் மற்றொரு கட்சியையும் சேர்ந்தவராக இருந்தால் அவ்வாறான ஒரு நிலையில் அரசு நிர்வாகம் தொடர்பான குழுக்களின் தலைமைப்பதவி ஜனாதிபதிக்கு வழங்கப்படும். அக்குழுக்களின் தீர்மானங்களை நிறைவேற்றும் பொறுப்பு பிரதமரின் தலைமையில் மேற்கொள்ளப்படும்.

அவ்வாறே பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஜனாதிபதி - பிரதமர் - பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் கூட்டுப் பொறுப்பு வகிப்பர்.

ஜனாதிபதி கையேற்றுள்ள பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக பிரான்ஸின் அரசமைப்பு முறைக்கு ஒப்பான ஒரு திட்டத்தை வகுப்பது தொடர்பான யோசனை இன்றைய சந்திப்பில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி தலைமையிலான பாதுகாப்புச் சபை நிறுவப்பட்டால் நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக ஜனாதிபதியோ பிரதமரோ பாதுகாப்பு சம்பந்தமான அமைச்சரோ தனித்து தீர்மானங்களை மேற்கொள்ளமுடியாது. பாதுகாப்புச் சபையின் பொது இணக்கப்பாட்டின்படியே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

பாதுபாப்பு அமைச்சின் நடவடிக்கைகளை பிரான்ஸ் முறைக்கேற்ப அமைக்கும் யோசனையை ஜனாதிபதி செயலகமே அரசிடம் முன்வைத்திருப்பதாகத் தெரிகிறது.

# ஜனாதிபதி விடுத்த அழைப்பை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்



தேசிய நல்லிணக்க அரசு அமைப்பதற்காக ஜனாதிபதி விடுத்த அழைப்பை பிரதமரும், அரசும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் பிரச்சினைகளை தேசிய நல்லிணக்க அரசு மூலமே தீர்க்கமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் ஆதரவும் இதற்குக் கிடைக்கும் என எதிர்க்கட்சித்தலைவர் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றினை அமைப்பதற்காக ஜனாதிபதி அழைப்பு விடுத்தமை அதிகாரத்தைக் காட்டுவதற்காக அல்ல. நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டே அந்த அழைப்பு விடுக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனநாயக முறைக்கு எதிராக நடந்துகொள்ளப்போவதில்லை என்று மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அநுரா தலைமையிலான குழுவினர்

# ஜே,வி.பியுடனான முன்னணிக்கு எதிரான சு.கவின் எம்.பிக்களுக்கு எதிராகக் குரல்!

சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையிலான முன்னணி அமைப்பதை சுதந்திரக் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமென்றே சீர்குலைந்து வருகின்றனர் என்று அநுரா பண்டாரநாயக்க தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

அவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள்முன் இனங்காட்டப் போவதாகவும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

அநுரா பண்டாரநாயக்க எம்பியின் ரொஸ்மிட் பிளேஸ் இல்லத்தில் கூடிய எம்.பிக்களே இக்குற்றச்சாட்டை சுமத்தியிருக்கின்றனர். மங்கள சமரவீர, தினேஷ் குணவர்த்தன, டிலான் பெரேரா, விமல் வீரவன்ஸ ஆகிய எம்.பிக்கள் உட்பட பலர் இக்கூட்டத்தில கலந்துகொண்டனர்.

பொதுவான தீர்மானத்தின் படி, சு.க.-ஜே.வி.பி.முன்னணியை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் சுதந்திரக் கட்சியிலுள்ள சிலர் முன்னணி ஏற்படுத்தப்படவிருப்பது தொடர்பாக ஜனாதிபதியை குற்றஞ்சாட்டி வருகிறார்கள் என்று இக்கூட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

முன்னணி அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்படாவிடின் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடாதிருக்க இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பலர் இணக்கம் தெரிவித்தனர் எனவும் கூறப்பட்டது.

# கசிப்பை ஒழிப்பதற்கு இப்படியும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.18

இணுவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி, விற்பனையை ஒழிக்கும் நடவடிக்கைகளில் இணுவில் கிழக்கு காரைக்கால் உதயசூரியன் சனசமூக நிலையத்தினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

மேற்படி பகுதியில் நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடைசெய்வதற்கென ஆரம்பத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், கசிப்பு உற்பத்தியை தடைசெய்ய முடியவில்லை.

இதனையடுத்து அண்மையில் கூடிய மேற்படி சனசமூக நிலைய உறுப்பினர்கள், பல தடவைகள் அறிவுறுத்தல்கள் மற்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை கசிப்பு உற்பத்தியை, விற்பனையை நிறுத்தாதவர்கள் நாளைமறுதினம் 20ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை நிறுத்தவேண்டும்.

இல்லையேல், பிரதேச செயலகத்தினால் அல்லது சமுர்த்தி அதிகார சபையினால் வழங்கப்படும் நிவாரணத்தை நிறுத்துமாறு சம்பந்தப்பட்டோரிடம் கோருவது எனத் தீர்மானித்துள்ளனர். (எ-10)

# ஸ்திரமற்ற அரசியல் நிலையால் வெளிநாட்டு முதலீடுகள் இழப்பு!

## 'புளூம்பேர்க்' அறிக்கையில் தகவல்

கொழும்பு,நவ.18

நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற அரசியல் நிலை காரணமாக இதுவரை ஆயிரத்து 500 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகள் இழக்கப்பட்டுள்ளதாக "புளூம்பேர்க்" என்னும் சர்வதேச வர்த்தக செய்தி நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த நிச்சயமற்ற அரசியல் நிலை மேலும் 3 மாதங்களுக்கு நீடித்தால் சுமார் 2ஆயிரத்து 500 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு முதலீட்டை நாடு இழக்க நேரிடும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலைமை உருவானால் கொழும்பு-கண்டி அதிவேக நெடுஞ்சாலை மற்றும் கொழும்பு துறைமுகத்தில் தென்புறமாக அமைக்கப்படவிருந்த இறங்குதுறை ஆகியவற்றின் பணிகள் கைவிடப்படக்கூடும். இந்தப் பணிகள் தொடர்பாக 6ஆயிரத்து 800 கோடி ரூபா பெறுமதியான முதலீட்டை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலிட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊவா மாகாணத்தின் சாகித்திய விழாவில் தமிழ் எம்.பி., ஊடகவியலாளர் புறக்கணிப்பு

## பெரும்பான்மையினப் பிரதிநிதிகளுக்கே முக்கிய இடம்

கொழும்பு,நவ.18

ஊவா மாகாணத்தின் ஒன்பதாவது தமிழ் சாகித்திய விழாவுக்கு ஊவா மாகாணத்தின் ஒரே ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான கே.வேலாயுதத்திற்கும்; தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் அழைப்பிதழ்களோ, விழா சம்பந்தப்பட்ட விவரங்களோ அனுப்பப்படவில்லை. இவர்கள் அனைவருமே புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

இவ்விழா பதுளை புதிய நூலக சேவை கேட்போர்கூடத்தில் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமானது.

ஊவா மாகாண சபையின் ஆளும கட்சி தமிழ் உறுப்பினரான வே.குமரகுருபரனும், விழா நடைபெறும் மண்டபத்தின் பின்வரிசையில் பாடசாலை மாணவ, மாணவிகளுடனேயே அமர்ந்திருந்தார். பெரும்பான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தே இவ்விழா நடைபெற்றதை அறியமுடிந்தது.

முதல்நாள் நிகழ்வில் இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் வருகையின்றி, மாகாண பொதுஜன ஐக்கிய முன்னணி விழாவாகவே இவ்விழா நடைபெற்றது. விழாவில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# முகாமிற்குள் பிரவேசித்தவர் குறித்து பெற்றோருக்கு அறிவிக்க உத்தரவு

தென்மராட்சி,நவ.18

இராணுவ முகாம் பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாக படையினரால் கைதுசெய்யப்பட்டு கடந்த மூன்றுமாத காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர் தொடர்பான விவரங்களைப் பெறுவதற்கு வன்னிப் பகுதியில் உள்ள அவரது பெற்றோருக்கு அறிவிக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி இந்த இளைஞர் படைமுகாமுக்குள் நுழையமுற்பட்டவர் என்ற காரணத்தால் கைதுசெய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இவரின் மனோநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதாகக் கருதப்படுகின்றது. இவர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது. அப்போது நீதிவான் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தார்.

கிளிநொச்சி தர்மபுரம், உளுவனூரைச் சேர்ந்த மகாலிங்கம் இரத்தினராசன் என்னும் இளைஞரே தடுத்துவைக்கப்பட்டுள்ளவராவார். இந்த இளைஞரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-117)

## மாணவி மயூரனி கொலை வழக்கில்

# பொலீஸார் மீது வழக்குத் தொடர சோலைமலைத்தேவர் ஆலோசனை

கொழும்பு,நவ.18

திருகோணமலை மாணவி மயூரனி கொலை வழக்கில் தனது பெயரைச் சேர்த்து களங்கம் ஏற்படுத்திய பொலீஸார் மீது வழக்குத் தொடுப்பது குறித்து தான் ஆலோசித்து வருவதாக சோலைமலைத்தேவர் தெரிவித்துள்ளார்,

மயூரனி கொலை தொடர்பாக அவர் பயின்ற கல்லூரி நிறுவுநரான சோலைமலைத்தேவர் கைது செய்யப்பட்டு பின்னர், வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

சோலைமலைத்தேவர் தெரிவித்திருப்பதாவது:-

மதுரை அண்ணா நகரில் எனது வீட்டில் உள்ள மாடியறையில் மயூரனி தங்கியிருந்தார். கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி அவரது அறையிலிருந்து துர்நாற்றம் வந்ததால் அருகில் சென்று வேலைக்காரர் பார்த்தார்.

இரத்தம் வெளியே வந்ததைக் கண்டு பொலீஸாருக்கு தகவல் கொடுத்தேன். என்னிடமும், என் மனைவியிடமும் பொலீஸார் 3 நாள் தொடர்ந்து விசாரணை நடத்தினர். எமது வீட்டில் மயூரனி தங்கியிருந்த 6 மாத காலத்தில் 21 நாள் மட்டுமே நான் மதுரையில் இருந்தேன். அதிலும் வீட்டிலிருந்தது சில மணிநேரங்கள்தான்.

ஆனாலும், பொலீஸார் எங்கள் மீது சந்தேகப்பட்டனர். இந்நிலையில், இலங்கையிலிருந்து வந்த மயூரனியின் சகோதரி சுபநந்தினி, மயூரனிக்கு தொலைபேசி எடுத்த போது பிரசன்னா பேசினார் என்று தெரிவித்தார்.

இதையடுத்து, மயூரனியின் அறையிலிருந்து பாலபிரசன்னா எடுத்துச் சென்ற கணனி, நகை, பணம், கத்தி ஆகியவற்றை பொலீஸார் கைப்பற்றினர்.

திடீர்த்திருப்பமாக கொலையில் என்னையும், என் மனைவியையும் சேர்ந்ததாக அப்போதைய மாநகரக் காவல்துறை ஆணையர் கந்தசாமி தெரிவித்தார்.

நான் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தேன் என்று செய்திகள் வெளியாகின்றன. நான் கையெழுத்திட்டு எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை. எல்லாமே பொலீஸின் நாடகம். இதனால், எனது புகழ், மானம் ஆகியவற்றுக்குப் பெரிய இழுக்கு ஏற்பட்டுவிட்டது. சிறையில் இருந்தும் அவதிப்பட்டோம். நியாயம் வேண்டும் என்பதற்காக சி.பி.ஐ. விசாரணை கேட்டோம். மறு விசாரணைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதில் பொலீஸார் நியாயமாக விசாரணை நடத்தி உண்மையைக் கண்டு பிடித்துள்ளனர்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## தவறவிட்ட தங்கநகை

யாழ்ப்பாணம்,நவ.18

ஆடியபாதம் வீதி, நல்லூரில் தவறவிடப்பட்ட சிறிய தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் மேற்படி முகவரியில் அமைந்துள்ள புதிய சக்தி கல்வி நிலையத்தில் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

# கிணற்றில் வீழ்ந்து இறந்ததாக சிறுவனின் சடலம் ஒப்படைப்பு!

## யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,நவ.18

கிணற்றில் தவறிவீழ்ந்து மரணமானார் என்று தெரிவித்து ஒன்றரை வயதுச் சிறுவனின் சடலம் நேற்று மாலை யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

ஆனைக்கோட்டைப்பகுதியைச் சேர்ந்த இராசலிங்கம் வைஷ்ணவன் என்ற சிறுவனின் சடலமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சிறுவனை அயல் வீட்டில் விளையாட அனுப்பி விட்டு தான் கோவிலுக்கு சென்று வீட்டுத் திரும்பியதாகவும் -

அப்போது அயலில் கூக்குரலிடும் சத்தம் கேட்டு சென்ற சமயம் தனது மகன் கிணற்றிலிருந்து தூக்கப்பட்டதாகவும்-

உடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்த போது சிறுவன் இறந்துவிட்டதாக மருத்துவர் தெரிவித்ததாகவும்-இறந்த சிறுவனின் தாயாரால் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-6-15)

## நாளைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னவும் அறிவிக்கப்படும்.

- இவ்வாறு அவர் சொன்னார்.

தனியார்துறை ஊழியர்களுக்கும் பெருந்தோட்டத் துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வுகளை வழங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளதா? என்று கேட்டபோது, 19ஆம் திகதி வரை பொறுத்திருங்கள், என்றார் நிதியமைச்சர்.

கடந்த இரண்டு வருடங்களாகப் பிரதமர் மேற்கொண்டுவரும் சமாதான முன்னெடுப்புக்களால் நாடு சுதந்திரம் அடைந்த பின் முதன்முதலாக இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்ந்துள்ளது.

உதவி வழங்கும் நாடுகளின் உதவிகளும், வெளியூர் முதலீட்டாளர்களின் தொழில் முயற்சிகளும் உல்லாசப் பிரயாணிகளின் வருகையும், வெளிநாட்டுச் செலவாணியும் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன.

ஆனால், ஜனாதிபதியின் நடவடிக்கையினால் பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு அசைவு ஏற்பட்டுள்ளது. சமாதானமும் பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைக்கப்பட்டவை. சமாதானம் சீர்கெட்டால் மீண்டும் பொருளாதார சூனியம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது எனவும் நிதியமைச்சர் சொக்ஸி சுட்டிக்காட்டினார்.

# அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினரை விரட்டுமாறு சதாம் மீண்டும் அழைப்பு!

பக்தாத்,நவ.18

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கக் கூட்டுப்படையினரை 'புனிதப் போர்' நடத்தி விரட்டி அடியுங்கள் என்று பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி சதாம் ஹுசைன், மீண்டும் ஈராக்கியர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஒலிநாடா ஒன்றில் பேசியிருக்கும் அவர், ஈராக்கைக் காலனி நாடாக மாற்றத் துடிப்பவர்களின் எண்ணம் ஈடேறாது என்றும் கூறியுள்ளார்.

இந்த ஒலிப்பதிவு நாடாவை 'அல் - அரேபியா' தொலைக்காட்சி நேற்று முன்தினம் ஒலிபரப்பியது.

ஒலிநாடாவில் பேசியிருப்பது சதாம் ஹுசைன்தான் என்று அந்த தொலைக்காட்சி நிலையம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இந்த ஒலிப்பதிவு நாடா, ஈராக்கின் பல்வேறு பகுதிகளில் நேற்று ஒலிபரப்பப்பட்டது.

"அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்புப் படையினர் ஈராக்கில் நிலைகொண்டுள்ளதால், மக்கள் சந்தோசமாக உள்ளனர் என்ற தவறான எண்ணம் நிலவுகிறது. அந்நியர்களின் இந்தத் தவறான எண்ணத்துக்கு ஈராக்கியர்கள் முடிவுகட்ட முன்வரவேண்டும்" - என்று ஒலிநாடாவில் சதாம் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈராக்கியர்களே! 'புனிதப்போர்' என்ற பாதையின் மூலமாக அந்நியர்களை விரட்டி அடியுங்கள். ஈராக் மக்களையும், நாட்டையும் ஆட்சிசெய்ய அந்நியர்களுக்கு எந்தத் தகுதியும் கிடையாது.

ஈராக் வீதிகளில் நடமாடுவதற்குக் கூட அந்நியர்களுக்கு அருகதையில்லை. எனவே, அவர்கள் வீதிகளில் இறங்க அஞ்சவேண்டாம். அதற்கான எதிர்ப்பை ஈராக்கியர்கள் காட்டவேண்டும்.

ஈராக்கிற்கு 'பிக்னிக்' வந்த அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்புக் கூட்டுப்படை தற்போது பெரும் அழிவைச் சந்தித்துவருகிறது.

பேரழிவு ஆயுதங்கள் என்ற போர்வையில் ஈராக்கை சுற்றிப்பார்க்க நினைத்த ஆக்கிரமிப்புப் படைக்கு, அவர்கள் நினைத்தபடி ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கவில்லை. இதனால், ஏமாற்றமே மிஞ்சியது.

"அமெரிக்கா தனக்கு ஆதரவான - இசைவான - ஆட்சியை ஈராக்கில் நடத்தத்திட்டமிட்டுள்ளது. அமெரிக்கா காணும் இந்தக் கனவும் பலிக்காது.

நாளாந்தம் தாக்குதல்கள் நடைபெறுவதால் ஆக்கிரமிப்புப் படையினர் கொல்லப்படும் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. இன்னும், ஏராளமான படையினர் ஈராக்கில் உயிர் விடப் போகிறார்கள்" - என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஒலிப்பதிவுநாடா 'அல் - அரேபியா' தொலைக்காட்சிக்கு எவ்வாறு கிடைத்தது என்பதை இந்தத் தொலைக்காட்சி கூறவில்லை.

ஆனால், பக்தாத்திலுள்ள அந்தத் தொலைக்காட்சி நிருபர் ஒருவரிடம் இந்த ஒலிப்பதிவு நாடா கொடுக்கப்படலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஒலிநாடாவில் பேசியிருப்பது சதாம் தானா? என்பதைக் கண்டறிய ஆராய்ச்சி நடத்தப்படும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இந்த ஒலிப்பதிவு நாடா நேற்று 'அல் - ஜெஸீரா' தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பப்பட்டது.

இதற்கிடையியே -

ஈராக்கின் வடபகுதி நகரில் அமெரிக்கப் படை நேற்றுமுன்தினம் இரவு ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

கெரில்லாக்களின் பயிற்சித் தளங்கள் எனச் சந்தேகிக்கும் இடங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தலைநகர் பக்தாத்திலுள்ள அமெரிக்கப் படைத்தலைமை கூறியுள்ளது.

'கறுப்புப் பருந்து' ரக ஹெலிகள் இரண்டு ஒரேயடியாகச் சுட்டு வீழ்த்தப்பட்டதன் பின் நடந்த முதலாவதும் - மோசமானதுமான - தாக்குதல் இதுவாகும் என்று அங்குள்ள ஏ.எப்.பி நிருபர் தெரிவித்துள்ளார்.

செய்மதி வழிகாட்டலுடன் இந்த ஏவுகணை வீசப்பட்டது. சுமார் 200 கிலோ எடையுள்ள இந்த ஏவுகணை வீழ்ந்து வெடித்த பகுதியில் தீச்சுவாலை மேலெழுந்து வருகின்றது. அங்கு கரும்புகை மூட்டமும் காணப்படுகிறது. இரவு நேரத்தில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்த விபரங்கள் தெரியவரவில்லை.



ஈராக்கியப் பொலீஸார் பலர் தமது சம்பளப்பணத்தை கொடுக்குமாறு கோரி பக்தாத்திலுள்ள பொலீஸ் நிலையம் முன்பாக அர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர். சதாம் ஆட்சிக் காலத்தில் அங்கு பொலீஸாராகக் கடமையாற்றிய பலருக்கு இப்போது சம்பளம் வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா.பணியாளர் ஆப்கானில் கொலை!

ஐ.நா.பணியாளர் ஒருவர் ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் தலிபான்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பெட்ரினா ஹெராய்ஸ்லாட் (வயது-29) என்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பணியாளரே கொல்லப்பட்டவராவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவர்மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

இவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கண்டித்துள்ளார். குறிப்பாக, தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் மீது தலிபான்களின் பார்வை திரும்பியுள்ளது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகளை அவர் பணித்துள்ளார்.

ஐ.நா.செயலர் கோபி அனானும் இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளார்.

வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த இவரைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில், அந்த வாகனச் சாரதியும் படுகாயமடைந்தார். சாரதி ஆப்கானிஸ்தான் பிரஜையாவார்.

தலிபான்களின் கை மேலோங்கி வருவதையே இது காட்டுகிறது என்று சம்பவம் நடைபெற்ற கந்தகார் மாகாணத்தின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## ரம்ஸ்பீல்டுக்கு தென்கொரியாவில் எதிர்ப்பு

தென்கொரியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்டுக்கு அங்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கொள்கைகளை எதிர்க்கும் ஆயிரக்கணக்கான கொரியர்கள், தென்கொரியாவுக்கு ரம்ஸ்பீல்ட் விஜயம் செய்ததை எதிர்த்து வீதிகளில் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

இதனால், அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ரம்ஸ்பீல்ட் செல்லும் பாதைகளில் ஆயிரக்கணக்கான பொலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ரம்ஸ் பீல்ட்டின் படத்தைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். அவற்றில் ரம்ஸ்பீல்ட்டின் தென்கொரிய விஜயத்தை எதிர்க்கும் வாசகங்கள் காணப்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சில இடங்களில் அட்டகாசத்திலும் ஈடுபட்டனர். வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி, ரயர்கள் போட்டு எரித்தனர். எனினும், பொலீஸார் தலையிட்டதையடுத்து அமைதியான ஆர்ப்பாட்டம் நடந்தது.

## பெண் பொலீஸ் படை சவூதி அரசு பரிசீலனை

சவூதி அரேபியாவில் பெண் பொலீஸ்படை ஏற்படுத்துவது குறித்து அந்நாட்டு அரசு பரிசீலித்து வருகிறது.

எந்தவொரு பாதுகாப்பு வலயத்திற்குள்ளும் பெண்களால் இலகுவாக நுழைந்துவிடமுடிகிறது. பெண்தானே என்று கெடுபிடி செய்யாமல் பாதுகாவலர்கள் விட்டுவிடுகின்றனர்.

இதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் தீவிரவாதிகள், பெண் தற்கொலைப் போராளிகள் மூலம் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இதற்காக பெண் தீவிரவாதிகளைத் தெரிவுசெய்வதில் தீவிரவாத இயக்கங்கள் முனைப்பாகச் செயற்படுகின்றன என்று சவூதி உளவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு தலைநகர் ரியாத்தில் குடியிருப்பு வளாகம் ஒன்றில் காரில் ஆயுதங்களுடன் வந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். முன்னதாக அந்தக் காரில் ஆண்களுடன் பெண்கள் சிலரும் இருந்ததால், அவர்களை குடும்பத்தினர் என்று கருதியே பாதுகாப்புப் படையினர் தீவிரமாக சோதிக்காமல் விட்டதன் விளைவுதான் அது.

எனவே, பெண் தீவிரவாதிகளைக் கண்டறியும் நோக்கில் பெண் பொலீஸ் படையை உருவாக்கவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதுகுறித்து உள்துறை அமைச்சகம் பரிசீலித்துவருகிறது.

பெண் பொலீஸ் படை அமைக்கப்பட்டால் அவர்கள் சண்டைகளில் நேரடியாக ஈடுபடுத்தப்படமாட்டார்கள். எந்த ஓர் இடத்திலோ அல்லது நிகழ்ச்சிகளிலோ எந்த வடிவிலாவது பெண் தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளார்களா என்று அவர்கள் கண்காணிப்பார்கள் என்று சவூதி உள்துறை அமைச்சக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

## ஆயுதங்களை சதாம் கைமாற்றினாரா? மறுக்கிறது அமெரிக்க உளவு நிறுவனம்

அல்-கெய்டா அமைப்பினருக்கோ அல்லது தீவிரவாத அமைப்பினருக்கோ சதாம் பேரழிவு ஆயுதங்களை மாற்ற முற்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.தெரிவித்துள்ளது.

சதாம் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறார் என்று அமெரிக்கா அந்நாட்டின் மீது போர் தொடுத்தது. போர் முடிந்து, சதாம் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்ட பின்னரும், இதுவரை ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் கண்டறியப்படவில்லை.

இந்நிலையில், பதவியில் இருந்து விரட்டப்பட்ட சதாம், தன்னிடம் இருந்த பேரழிவு ஆயுதங்களை அண்டை நாடான சிரியாவிற்கு மாற்றியிருக்கலாம் எனக் கூறப்பட்டது. ஆனாலும், அதற்கான ஆதாரங்கள் தங்களிடம் இல்லை என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டோலீசா ரைஸ் கூறிவிட்டார்.

இதனால், அல்-கெய்டா அமைப்பினருக்கோ அல்லது வேறு தவிரவாத அமைப்பினருக்கோ சதாம் பேரழிவு ஆயுதங்களை மாற்றியிருக்கலாம் என சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. இதுவும் வதந்தியே.

இது தொடர்பாக தங்களுக்கு எந்தத் தகவலும், ஆதாரங்களும் கிடைக்கவில்லை என சி.ஐ.ஏ. கூறியுள்ளதாக 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

அமெரிக்காவின் செயற்றிட்ட மற்றும் சர்வதேச ஆய்வுகள் மையத்தின் மூத்த உறுப்பினர் அந்தோணி கார்டஸ்மேன், பேரழிவு ஆயுதங்கள் தொடர்பாக சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். சி.ஐ.ஏ. உளவு அமைப்பின் ஆலோசகர் டேவிட்கே என்பவர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் அல்-கெய்டா தீவிரவாதிகளுக்கோ, ஏனைய தீவிரவாதிகளுக்கோ பேரழிவு ஆயுதங்களை மாற்ற சதாம் முயற்சிகள் மேற்கொண்டார் என்ற தகவல்கள் இல்லை. அதற்கான ஆதாரங்களும் இல்லை. இப்போதும் பேரழிவு ஆயுதங்கள் இருக்கும் என உறுதியாக நம்பினால், அவை சதாம் மக்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஈராக் குடியரசுப் படையினரிடமோ அல்லது அவர்களின் கட்டுப்பாட்டிலோ இருக்கலாம் இருந்தாலும், இது உறுதி செய்யப்படாத தகவலே - எனக் கூறியுள்ளார் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## இறங்கு பாலம் சேதம்: 13 உயிர்கள் பலி!

பிரான்ஸ்,நவ.18

பிரான்ஸின் இராணிமேரி கப்பல் திருத்தத்தளத்தில் இறங்குதுறையையும், கப்பலையும் சம்பந்தப்படுத்துவதான பாலமொன்று சனிக்கிழமை அறுந்து வீழ்ந்ததன் காரணமாக ஏற்பட்ட விபத்தில் 13 பேர் கொல்லப்பட்டுடன் மேலும் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

நவீனமயப்படுத்தப்பட்ட கப்பலொன்றை பார்வையிடுவதற்கென கப்பல் திருத்தத்தள ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்கள் வருகை தந்தபோது இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இறந்தோர் மேற்பட்டோர் 6 [illegible] கீழ் தரையில் வீழ்ந்துள்ளனர்.

## துருக்கி யூதத்தலங்கள் மீதான தாக்குதல்கள் அல்-கெய்டா இயக்கத்தின் கைவரிசையே!

துருக்கித் தலைநகர் இஸ்தான்புல்லில் நடந்த தற்கொலைத் தாக்குதல்களுடன் அல்-கெய்டா இயக்கம் தொடர்புபட்டிருக்கிறது என்று கருதப்படுகிறது.

"யூதமதத்தலங்கள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல்கள் அல்-கெய்டாவின் கைவரிசையே"- என்று அங்குள்ள பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இது குறித்து துருக்கி மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இத்தாக்குதலுக்கு துருக்கியில் தளம் அமைத்து செயற்படும் 'இஸ்லாமிய சிறப்பு முன்னணி' என்ற அமைப்பு பொறுப்பேற்றது. ஆனால், இந்த அமைப்பால் இவ்வளவு பெரிய - சக்திவாய்ந்த - தாக்குதல்களை நடத்தியிருக்க முடியாது என்று துருக்கிப் பொலீஸார் தெரிவித்தனர்.

"தீவிரவாத அமைப்புகள் பல ஒன்றிணைந்தே இத்தாக்குதல்களை நடத்தியுள்ளன"- என்று சவூதி பொலீஸ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

குறிப்பாக, தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னணியில், பின்லேடனின் அல்-கெய்டா இயக்கத்திற்குத் தொடர்பு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

"இந்த குண்டுத் தாக்குதல்களில் 23பேர் கொல்லப்பட்டனர். குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்ட முறை குறித்து தெளிவாக உறுதிப்படுத்த முடியாதிருக்கிறது. இத்தாக்குதல்கள் தற்கொலைக் குண்டுதாரிகளால் நடத்தப்பட்டவையா? அல்லது ரிமோட் கொன்ட்ரோல் மூலம் வெடிக்க வைக்கப்பட்டவையா? என்று இன்னமும் உறுதி செய்ய முடியவில்லை.

## ஈ-மெயில் மூலம் புதிய வைரஸ்

நியூயோர்க்,நவ.18

ஈ-மெயில் மூலம் கணனிகளில் புதிய வைரஸ் பரவிவருகிறது. Pay-pal என்ற பெயரில் ஈ-மெயிலில் வரும் தகவல்கள் மூலம் இந்த வைரஸ் பரவிவருவதாக அமெரிக்க கணனிமையம் ஒன்று எச்சரித்துள்ளது.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.பரமேஸ்வரன் துர்க்கையம்மன் கோயில் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (24770)

### நாய் காணவில்லை

எங்களுடைய வெள்ளைநிற பொமேரியன் நாயை 14-11-2003 முதலாகக் காணவில்லை. கண்டுபிடித்துத் தருபவருக்கு, கண்டுபிடிக்க உதவுபவருக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: ப.கௌரி 155, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (24805)

### தவறிவிட்டது

பாலகிருஷ்ணன் கேதீஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (612180130X), விசேட அடையாள அட்டை (0902027216) என்பன 15.11.2003 அன்று கச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.86 நல்லூர் குறுக்குவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவும். T.P 222 - 3502. (24799)

இல.56 புனித செபஸ்தியார் வீதி, குருநகரைச் சேர்ந்த நிமால் கலன்ஸ்ரான்லி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (842871883V) ஓமந்தையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும்.(24801)

### கணனிகள் அன்பளிப்பு

வலி.வடக்கு,நவ.18

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலைக்கு லண்டனில் உள்ள பழைய மாணவர்களினால் கணனிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் இந்தக் கணனிகள் பழையமாணவர் சங்கத்தினால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (ஏ-86)

### திருவெம்பாவை பாடல் நூல் இலவசம்

யாழ்ப்பாணம்,நவ.18

திருவெம்பாவை தினத்தை முன்னிட்டு மில்க்வைற் தொழிற்சாலையினால், திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய பாடல்கள் அடங்கிய நூல்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன என்றும் -

ஆலயங்கள், இந்து இளைஞர் மன்றங்கள், பாடசாலைகள் மேற்படி தொழிலகத்துடன் தொடர்புகொண்டு நூல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - சிவநேயர் இ.தவகோபால் அறிவித்துள்ளார். (ஏ)

### கிறிஸ்தவ கல்லூரியில் மாடிக்கட்டடம்

கோப்பாய்,நவ.18

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு 50 லட்சம் ரூபா செலவில் 14 வகுப்பறைகள் கொண்ட இரண்டு மாடிக் கட்டடத்தொகுதி ஒன்று ஜிரிஇசற் நிறுவனத்தின் உதவியுடன் நிறுவப்படவுள்ளது.

மேற்படி கட்டட நிர்மாணத்துக்கான நிதியில் ஐந்து லட்சம் ரூபாவை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வழங்கவுள்ளது. (ஏ-72)

### குடும்ப சுகாதார அலுவலர் பதவி வெற்றிடம்

சண்டிலிப்பாய்,நவ.18

பண்டத்தரிப்பு பகுதிக்கான குடும்ப சுகாதார சேவை அலுவலர் பதவி கடந்த பல வருடகாலமாக நிரப்பப்படாமல் உள்ளது.

பிரான்பற்று கிராமத்திற்கான குடும்ப சுகாதார சேவை அலுவலரே பண்டத்தரிப்பு பகுதிக்கும் பதில் கடமை புரிந்து வருகின்றார்.

இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு இப்பகுதி மக்கள் சுகாதார சேவை பிரதிமாகாணப் பணிப்பாளரை கடித மூலம் கேட்டுள்ளனர். (ஏ-135)

### பழுதடைந்த நிலையில் வீதி மின் விளக்குகள்

வட்டுக்கோட்டை,நவ.18

வட்டுக்கோட்டைப் பகுதியில் பிரதான வீதிகளில் பொருத்தப்பட்ட வீதி மின் விளக்குகள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

தற்போது பெய்துவருகின்ற பருவகால மழையினால் வீதிகள் எங்கும் கடும் இருளில் மூழ்கியுள்ளன. இந்நிலையில் வீதிமின்விளக்குகள் இன்றி மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதைக் காண முடிகிறது. (ஏ-161)

# அரிசி ஆலைகளின் கெடுதிகளுக்கு எதிராக நிந்தவூரில் ஆர்ப்பாட்டம்!

நிந்தவூர்,நவ.18

நிந்தவூர் பிரதேசத்தில் இயங்கும் நாற்பதுக்கு மேற்பட்ட தனியார் அரிசி ஆலைகளால் ஏற்படும் அனர்த்தங்கள், சூழல் பாதிப்புகளை கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

அரிசி ஆலைகளில் உயிராபத்தை விளைவித்து வரும் நீராவிக் கொதிகலன் பாவனையை உடனடியாகத் தடைசெய்வதுடன், ஊறல் அரிசி ஆலைகளைத் தடை செய்யுமாறுகோரியும் -

அரிசி ஆலைகளால் ஏற்படும் சூழல மாசடைவு மற்றும் அரிசி ஆலைகளுக்கு அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் அனுபவித்து வரும் பாதிப்புகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுமே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நிந்தவூர் அட்டப்பள்ளம் மஸ்ஜிதுல ஹுதா ஜும்மா பள்ளிவாசலுக்கு முனபாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை அரிசி ஆலைகளால் கூடிய பாதிப்புகளுக்குள்ளாகியுள்ள நிந்தவூர் 21 ஆம், 22 ஆம், 23 ஆம், 10ஆம் பிரிவுகளின் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஏற்பாடு செய்திருந்தன. (எ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆவரங்காலைச் சேர்ந்த வானொலி, மேடை நாடக எழுத்தாளரும் முப்பது வருடங்களுக்கு மேலாக சிறந்த சமூகப்பணிகளையாற்றி வருபவருமான,

உயர்திரு.

**காசியர் சிவசோதி**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையை மனமகிழ்ச்சியுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இவர் ஆவரங்கால் மத்திய சனசமூக நிலையம், லண்டன கிளை ஒன்றியம், கி.மு.சங்கம், மத்தி முன்பள்ளி இலக்கிய மன்றம், ஆவரங்கால் மேற்கு பிரிவு சர்வோதய இயக்கம், மனமகிழ் மன்றம் ஆகியவற்றின் தலைவராகவும் – ஆவரங்கால் மேற்கு தே.ஏ.பேரவை, விவசாயிகள் சம்மேளனம், கலைமகள் நாடக மன்றம், அ.ப.நோ.கூ.சங்க -21 – கிளை ஆகியவற்றின் செயலாளராகவும் – அ.ப.நோ.கூ.ச கல்வி நிதி உபகுழு, பொதுச்சபை, புத்தூர் சோமாஸ்கந்த பா.அ.சங்கம், நல்லிணக்க மன்ற உறுப்பினராகவும், மத்தி விளையாட்டுக் கழகம், ந.இ.வி.பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் போஷகராகவும் – பணியாற்றி வருகின்றார். இவரது பணிகள் மேன்மேலும் சிறப்புற்றுத் திகழ எல்லாம்வல்ல கன்னாரை அம்பாள் கிருபா கடாட்சத்தை வேண்டிப் பிரார்த்தித்து அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆவரங்கால்,
புத்தூர்.

– மத்திய சனசமூக நிலையத்தினர்.

(24798)(25-21-14-26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சமூகத்தின் சிறந்த சமூக சேவையாளரும், துன்னாலை மேற்கு தக்குச்சம்பாநியைச்சேர்ந்தவருமான

உயர்திரு.

**பாலன் தவயோகம்**

அவர்கள் 14.11.2003 அன்று யாழ் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் யா/நெல்லியடி ம.மவி. பழைய மாணவனும், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்க முன்னாள் இயக்குநரும், தற்போதைய பொதுச்சபை உறுப்பினரும், அகில இலங்கை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு ஊழியர் சங்க சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், துன்னாலை தெற்கு தயாநிதி கிராம அபிவிருத்திச் சங்கம், ச.சமூக நிலையம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், சிறந்த சமூக சேவையாளரும், தொழிற்சங்கவாதியும் ஆவார். இவரது சமூக சேவை அளப்பரியது. இவரது சமூகசேவை மேன்மேலும் சிறக்கவும், தொடரவும் எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுவதுடன் அவர்கள் நீடூழி காலம் வாழ்ந்து சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

சி.செல்லையா J.P.,
பொ.ஸ்ரீஜீவன் (ஜேர்மனி),
பொ.ஸ்ரீரவன் குடும்பத்தினர்.

கிளி இல்லம்,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

(24806)(34-21-14-26)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணிபுரியும் ப.பிரகீலன (பிரகாஸ்) அவர்களின் பாசமிகு தந்தையார்

**செல்லப்பா பரராஜசேகரம்**

அவர்களின் மறைவு குறித்து நாம் பெரிதும் கவலையடைகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

333, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(24804)(34-21-14-26)

- R.M.S. ஊழியர்கள்
"இராசம்ஸ்".

## ஊர்காவற்றுறை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### பதவி வெற்றிடம்

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கு தகுதியானவரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ரூபா 10/- செலுத்திச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் "*தலைவர், பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், ஆஸ்பத்திரிவீதி, ஊர்காவற்றுறை*" என முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும்.

களஞ்சிய முகாமையாளர்:- 208/14 = 3750 - 5200
70x10-75x10

கல்வித் தகைமைகள்:-

அ. கூட்டுறவுப் பணியாளர்கள் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம். அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (சா.தரம்) / க.பொ.த.சாதாரண தரத்தில் 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் வர்த்த கணிதம், தூய கணிதம், சிங்களம், தமிழ் என்பவற்றினை உள்ளடக்கிய 6 பாடத்திலான சித்தி.

மேற்குறிப்பிட்ட பதவிக்கான வயதெல்லை 18 - 45 வரையாகும். தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் விண்ணப்பங்கள் யாவும் தாம் பணிபுரியும் சங்கங்களூடாகவே அனுப்பிவைத்தல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: கல்வித் தகைமைகள், சேவைச் சான்றிதழுக்கான நிழல் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 30-11-2003

தலைவர்,

பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,

(சி-31340) ஆஸ்பத்திரிவீதி, ஊர்காவற்றுறை. (14-21-26)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பதவி வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படை)

யாழ். பல்கலைக்கழகத்தின் கொழும்பு/யாழ்ப்பாணம் விருந்தினர் விடுதிகளில் **காவற்பொறுப்பாளர்/சமையல் பதவிக்கு** ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 2003.12.15ஆம் திகதிவரை எம்மால ஏற்றுக்கொள்ளப்படும்.

தகைமைகள :

(I.) எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
(II.) சமையல் செய்யக்கூடிய பூரண அறிவு இருப்பதுடன், தளபாடப்பொருள்கள், மின்சாதனங்கள், மட்பாண்டப் பொருள்கள், வெட்டும் கருவிகள் என்பனவற்றினைத் தகுந்த முறையில் பராமரிக்கக் கூடியவராகவும், வீட்டுத்தோட்டப் பராமரிப்பு தெரிந்தவராகவும் பொருள்களின் விபரப்பட்டியலை பேணிப் பராமரிக்கத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: ரூபா.5190/= மாதமொன்றிற்கு (நிலையானது)
வயது: விண்ணப்ப முடிவுதிகதியில் 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
தெரிவு: பொது உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சைமூலமும்.

விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழகக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/= செலுத்திய பின்னர், இப்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தாபனக்கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/= பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 23x10 ச.மீ. அளவுடைய, சுயமுகவரியிட்ட, முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்ப வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடாத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை,
2003.11.14.

(C/31347)(34-21-14-26)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

முன்னாள் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரும் தற்போதைய மாவட்ட திட்டமிடல் அலுவலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளருமாகிய

திரு. நா.சிவபாதசுந்தரம்

அவர்களின் பாசமிகு தாயார்



**திருமதி நாகலிங்கம் பாக்கியம்**

அவர்களது மறைவு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு நாம் அனுதாபம் தெரிவித்து அவருக்கு அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு,
மருதங்கேணி.

சமுர்த்தி முகாமையாளரும்,
சமுர்த்தி உத்தியோகத்தர்களும்.

(24803) (26-21-14)

# உதயன்

## இந்தியப் பங்களிப்பு

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான நடவடிக்கைகளில் இருந்து சற்று ஒதுங்கியிருக்க வேண்டிய இக்கட்டு அனுசரணையாளர்களான நோர்வேத்தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை, நாட்டின் உள்விவகாரம். நாட்டுக்குள்ளேயே இது தீர்க்கப்பட வேண்டும். வெளியார் இதில் சம்பந்தப்பட இடமேயில்லை என்று முன்னைய சிங்கள அரசுகள் கூறிவந்தபோது, அதிலிருந்து வேறுபட்டு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துக்கு - அனுசரணைப் பணிக்கு - வழிசெய்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவேதான். நோர்வேத் தரப்பை இப்பணிக்கு முதன் முதலில் அழைத்தவர் அவரேயெனினும், பிற்காலத்தில் ஐ.தே.முன்னணி அரசு இந்தச் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நோர்வேயின் பங்களிப்பைப் பெறத் தொடங்கியதும், நோர்வே அனுசரணையாளர்கள் தொடர்பான ஜனாதிபதியின் போக்கில் பெருமாற்றம் ஏற்பட்டது.

அனுசரணையாளர்களான நோர்வேயையும், புலிகளுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் பிரதமர் ரணிலின் அரசையும் சீண்டும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டதோடு, நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தார்.

அதன் விளைவு, நோர்வேத் தரப்பு தனது பணிகளை, முடை கட்டிவைத்து விட்டுத் தற்காலிகமாக ஒதுங்கும் - இடைநிறுத்தும் - சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியாவை ஈடுபடுத்துவது பற்றிய கருத்துக்கள் முழங்கத் தொடங்கியிருக்கின்றன.

ஜனாதிபதியின் பக்கத்தில் நாடாளுமன்றில் முதன்மை வகிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டைக் கோருகின்றார். அதற்கு உகந்த - நல்ல - தக்க - தருணம் இதுதான் என்கிறார் அவர்.

வேறு வார்த்தைகளில் சொல்லுவதானால் நோர்வேத் தரப்பு தனது அனுசரணைப் பணியை இடைநிறுத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அப்பொறுப்பை இந்தியா கபளீகரம் செய்து விட வேண்டும் என்று அவர் கருதுகின்றார் என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

"இதேசமயம், இலங்கையின் பாதுகாப்புக்குப் பக்கபலமாக இந்தியா இருக்கின்றது" என்று ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறியிருப்பதும் -

இலங்கை நிலைவரங்களை அடுத்து இலங்கையில் ஒரு கண் வைத்திருக்கும் வகையில் இந்திய இராணுவம் உஷார்படுத்தப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கவை.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் கோருவது போல - ஜனாதிபதியின் நப்பாசையை நிறைவு செய்வது போன்று- இலங்கை விடயத்தில் இந்தியா அளவுக்கு மிஞ்சி, தலையிடுவதற்கு வாய்ப்புக்கள் மிகக் குறைவே என்று கருதத்தப்படுகின்றது.

இலங்கை விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு கையைச் சுட்டுக் கொண்ட நல்ல அனுபவம் - பாடம் - படிப்பினை - இந்தியாவுக்கு உண்டு.

அது தவிர, சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று பறைசாற்றிக் கொண்டு அகலக் கால் வைத்த உலக வல்லரசான அமெரிக்கா, அங்காங்கே வாங்கும் அதிரடிகள், இந்தியாவை 'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்ற மன நிலைக்கு நிச்சயம் தள்ளியிருக்கும் என நம்பலாம்.

இந்தியத் தலையீட்டைப் பகிரங்கமாகக் கோரும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, உள்நாட்டு அரசியலில் தமது கட்சிக்குள்ளேயே கணிசமான அளவு எதிர்ப்பை எதிர்கொள்பவர். அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் கூட்டமைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்சிக்குள் இருக்கும் அவரது எதிர்ப்பாளர்கள் கூறி வருகின்றனர். ஆனால், ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதை அடியோடு எதிர்க்கின்றார் ராஜபக்ஷ.

தமது எதிரிகளுக்கு சூடு கொடுக்க இந்தியத் துருப்பைப் பயன்படுத்த அவர் விழைகின்றார். இந்தியத் தரப்பின் பக்கம் சாய்வதை எப்போதுமே ஜே.வி.பி. வரவேற்காது. எனவே, இனப்பிரச்சினைக்குச் சமரசம் செய்ய வருமாறு இந்தியாவை சுதந்திரக் கட்சித் தரப்பு அழைக்குமானால், சுதந்திரக் கட்சிப் பக்கமே ஜே.வி.பி. தலைவைத்துப் படுக்காது என்று ராஜபக்ஷ கணக்குப் போடுகின்றார். அதனால் தான் அத்தகைய அழைப்பை விடுக்க வேண்டும் என அவர் முந்திக் கொண்டு கோரிக்கையை முன்வைக்கின்றார்.

ஆனால், சம்பந்தப்பட்ட முக்கிய தரப்புகளின் இணக்கமின்றி இந்தியாவை இவ்விடயத்துக்குள் மீண்டும் இழுப்பது வீண் விபரீதங்களையே ஏற்படுத்தும்.

# காலத்தின் பதிவு



ஒய்யார உறக்கம்....!

படம்: தீபன்

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு விரைவில் 3,000 பேருக்கு நியமனம்

மூதூர்,நவ.18

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு விரைவில் 3,875 ஆசிரியர்களை நியமிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதில், வடக்கு - கிழக்கிற்கு ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தி பெய்தியவர்களுக்கான 1,000 நியமனங்களும், நாடு முழுவதுமான 2,750 பட்டதாரி ஆசிரியர் நியமனங்களும் தேசியப் பாடசாலைகளுக்கான 175 ஆசிரியர் நியமனங்களும் அடங்குகின்றன.

இந்நியமனங்களை இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிற்கிணங்கவும், இனவிகிதாசாரத்திற்கேற்பவும் வழங்க கல்வி அமைச்சு ஆவன செய்யவேண்டும் என இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர், கல்வி அமைச்சர் கலாநிதி கொடித்துவக்குவைக் கோரியுள்ளார்.

மூவாயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர் நியமனத்திற்காக 2000ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட அங்கீகாரத்திற்கமைய 1,000 பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள், 1,000 தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் போக எஞ்சிய 1,000 நியமனங்களே தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரத் தகுதி பெற்றவர்களுக்கு போட்டிப் பரீட்சை மூலம் வழங்கப்படவுள்ளன. பட்டதாரி ஆசிரியர்களுக்கான 2,750 ஆசிரியர் நியமனங்களில் 1,250இற்கு திறைசேரி அங்கீகாரம் அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ள கல்வி அமைச்சர், மேலும் 1,500 பட்டாரி ஆசிரியர்களை நியமிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்டுள்ள 1,250 நியமனங்களில் 820 சிங்கள மொழி மூலப்பட்டதாரிகளும், 225 ஆங்கிலமொழிமூலப் பட்டதாரிகளும், 205 தமிழ்மொழிமூலப் பட்டதாரிகளும் நியமனம் பெற உள்ளனர். அங்கீகாரம் கோரப்பட்டுள்ள நியமனங்களில் 1,000 தமிழ்மொழிமூலப் பட்டதாரிகளும், 500 ஆங்கிலமொழிமூலப் பட்டதாரிகளும் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்நியமனங்கள் மத்திய மாகாணத்திற்கு - 309, வடமேல் மாகாணத்திற்கு - 153, தென் மாகாணத்திற்கு - 148, ஊவா மாகாணத்திற்கு - 144, வடமத்திய மாகாணத்திற்கு - 125, வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு - 86, மேல் மாகாணத்திற்கு- 58, சப்பிரகமுவ மாகாணத்திற்கு - 52 என்ற விகிதத்தில் வழங்கப்படவுள்ளன.

ஆசிரியர் யாப்பிற்கமைய இந்நியமனங்கள் யாவும் மாகாணங்களின் அரசசேவை ஆணைக்குழுவினாலேயே வழங்கப்படவுள்ளன. தேசிய பாடசாலைகளுக்கான 175 நியமனங்களை அரசசேவை ஆணைக்குழுவின் மூலம் வழங்க நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சு எடுத்து வருகிறது.

# மூன்று பிரதேச செயலர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,நவ.18

உதவிப் பிரதேச செயலர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த மூன்று பிரதேச செயலகங்களுக்கு புதிதாக பிரதேச செயலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனையவற்றுக்கு விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த நியமனங்களை பொதுநிர்வாக அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன்படி சண்டிலிப்பாய் பிரதேச செயலராக பிரம்மஸ்ரீ ஆசுப்பிரமணியசர்மா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நாளை புதன்கிழமை முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். இவர் முன்னர் திருகோணமலை நகர பிரதேச செயலராகவும் பின்னர் மாகாணக் கட்டுறவு ஆணையாளராகவும் பொதுநிர்வாக அமைச்சின் உதவிச் செயலாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உடுவில் பிரதேச செயலராக திருவாகரனும், சங்கானைப் பிரதேச செயலராக மோகன் றாஸாம் அண்மையில் பொதுநிர்வாக அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது பிரதேச செயலர்களாக நியமிக்கப்படுபவர்களில் பலர் மாகாண அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் உயர் பதவிகளை வகித்தவர்கள் எனவும், இவர்கள் தமது அனுபவத் திறமையின் மூலம் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளில் முன்னின்று செயற்படுவார்கள் எனவும், யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை -

கோப்பாய் பிரதேச செயலகம் மற்றும் பதில் பிரதேச செயலர்கள் கடமையாற்றும் பிரதேச செயலங்களுக்கு விரைவில் புதிதாக பிரதேச செயலர்கள் நியமிக்கப்படவுள்ளதாகக் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது. (ம-8)

## நாளை

கார்த்திகை 03
புதன்கிழமை
(19.11.2003)
திதி : தசமி
பிற்பகல் 3.10 வரை
நட்சத்திரம்: உத்தரம்
பின்னிரவு 4.21 வரை
சுபநேரம்: 4.39-6.09
ராகுகாலம்: 12.09-1.39
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உணவு உட்கொள்ளும் போதாயினும் அமைதியாக இருக்கப் பழகுங்கள்.

# சுப்பிரமணியம் பூங்கா மீள நிர்மாணிக்கப்படும்

## இம்மாத இறுதியில் கட்டுமானப் பணிகள்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவின் மீள்கட்டுமானப் பணிகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் இந்த தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாநகரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்த இந்தப் பூங்கா, 1985 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக முற்றாக அழிவடைந்தது. பல வருடங்கள் கழிந்த நிலையிலும் இந்தப் பூங்காவை மீளமைக்கும் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த சிறுவர் பூங்கா மீள நிர்மாணிப்பதற்கென 'யுனிசெவ்' நிறுவனத்தின் யாழ். அலுவலகம் 20 லட்சம் ரூபா நிதியினை தற்போது வழங்கியுள்ளது. இந்த நிதியினைப் பயன்படுத்தி மீள் நிர்மாணப் பணிகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முற்றாக அழிந்த நிலையில் உள்ள இந்தப் பூங்காவினை மீள நிர்மாணிக்க பல கோடி ரூபா நிதி தேவைப்படுகின்றது. இந்த சிறுவர் பூங்காவினை முழுமையாக நவீனமயப்படுத்தும் நோக்குடன் நிதி உதவி வழங்குமாறு பல வெளிநாட்டு நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-7)

# பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.18

கொழும்பிற்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லையென தெரிவித்து அவரது மனைவி யாழ். பொலீஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த பொன்னுத்துரை சரவணபவன் (வயது 48) என்ற குடும்பஸ்தரே காணாமற்போயுள்ளார் என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உறவினர்களைச் சந்திப்பதற்காக கொழும்பு சென்றவர் இதுவரை கொழும்பைச் சென்றடையவில்லை என்று அவரது மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (எ-7-5)

# ரயினோ அதிர்ஷ்டத்திற்கு மேல் அதிர்ஷ்டம்!

40 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் நம்பிக்கையை வென்றெடுத்த ரயினோ அஸ்பெஸ்டஸ் தகடுகளை வாங்கி,
பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்

முடிவு திகதி 23 டிசம்பர் 2003

- புத்தம் புதிய மாருதி கார்
- 2 புத்தம் புதிய 125 CC மோட்டார் சைக்கிள்கள்
- 10, 2 கதவு குளிர்சாதனப் பெட்டிகள்
- 10, 21 தட்டையான திரையிலான வர்ண தொலைக்காட்சிகள்
- 10, சலவை இயந்திரங்கள்


நிபந்தனைகள்


- நடுவர்களின் முடிவு இறுதியானது
- இப்போட்டியில் ரயினோ ரூ.'பிங் புரடக்ட்ஸ் லிமிற்றெற்றினதும், ட்ரைஅட் அட்வர்டைஸிங் (பிறைவேற்) லிமிற்றெற்றினதும் அலுவலர்களும், அவர்களது உறவினர்களும் பங்குபற்ற முடியாது.

பெயர்: ..........
விலாசம்: ..........
விற்பனை நிலையத்தின் பெயர்: ..........
விற்பனை நிலையத்தின் விலாசம்: ..........

இக் கூப்பனை நிரப்பி 2003 டிசம்பர் 15இற்கு முன்னர் உங்கள் சிட்டையின் (Bill) புகைப்படப்பிரதியுடன் கீழேயுள்ள விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வையுங்கள்

C/78/2003






RHINO ரயினோ ரூ.'பிங் ப்ரடக்ட்ஸ் லிமிற்றெற்
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
தொலைபேசி : 2693694, 2674765 பக்ஸ் : 2667257

40 வருட மேன்மையான சேவை


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மறைவு
20.10.2003

நயினை உயர் சைவவேளாளகுல திலகர்

## அமரர் கதிரவேலு திருஞானசம்பந்தர்

(நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வன்னேரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

மனிதருள் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தீர்!
புனிதமாய் வாழ்ந்து புண்ணியர் கழல் சேர்ந்தீர்
இனி நாம் உங்கள் அன்பு முகத்தை எப்போது காண்போம்?
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (19.11.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு நண்பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் கதிரவேலு பொன்னம்மாவின் அன்பு மகனாரும் கந்தையா வள்ளியம்மையின் அன்பு மருமகனும் நீலாம்பிகை, காலஞ்சென்ற நாகரத்தினம், தனலக்சுமி, விசாகப் பெருமாள், இராசேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் லீலா, இராசகோபால், இராஜலிங்கம் (கனடா), சுசீலா, ராஜ்குமார், கமலா, இராசரத்தினம், இராஜேந்திரம் (சுவிஸ்), கணேசலிங்கம், கேதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தில்லைநாதன் சோபிகா (கனடா), லீலா முத்துக்குமார், ஜெயமலர், கண்ணன், குமுதினி, யோகமலர் (சுவிஸ்), இராசேஸ்வரி, மயூரன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

இல. 92,
வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி.

-குடும்பத்தினர்.

# இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் கிடைத்தால் மூலைமுடுக்கெல்லாம் தமிழீழ காவல்துறை

**அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

**இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன் படியான மக்களின் இயல்பு வாழ்க்கை தமிழர் தாயகப் பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.**

**அந்தவகையில், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனின் செவ்வி இன்று வெளிவருகின்றது.**

## பணிகளை முழுவீச்சில் தொடரும் என்கிறார் பா.நடேசன்




*கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின்பு மக்களின் இயல்பு வாழ்க்கையில் முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டுள்ளதா?

*பதில்:* இயல்பு வாழ்க்கை இன்னமும் முற்றுமுழுதாக ஏற்படவில்லை; இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்பவில்லை; அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. யுத்தத்தினால் அழிந்த பிரதேசங்கள் இன்னமும் மீள்புனரமைக்கு உட்படுத்தப்படவில்லை. [illegible]யில், மக்களின் இயல்பு வாழ்க்கை வழமைக்குத் திரும்பியதாக எப்படிக் கூறமுடியும்? புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வரமுன்னர் இருந்த அவல வாழ்க்கையை மக்கள் இன்னமும் தொடரவேண்டிய நிலையிலேயே உள்ளனர்.

*கேள்வி:* மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்ப என்ன செய்ய வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:* எமது மக்கள் கூட்டுக்குடும்பங்களாக ஒவ்வொரு கிராமங்களிலும் வாழ்ந்தவர்கள். உறவினர்களுடன் கலந்து தமது கிராமம் என்ற இறுமாப்புடன் தங்கள் தங்கள் கிராமங்களில் பூர்வீகமாக வாழ்ந்து வந்தனர். தமது பண்பாடு கலாசாரங்களைப் பேணி அவர்கள் வாழ்ந்து வந்த வாழ்க்கை முறை மீண்டும் உருவாகும் போதுதான் இயல்பு வாழ்க்கை என்பது அர்த்தமுள்ளதாக அமையும்.

கூட்டுவாழ்க்கைக் கலாசாரத்தைக் கொண்ட மக்கள் இன்று திக்குத்திக்காக வாழ்கின்றனர். அவர்களின் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையும் சீரழிந்து போயுள்ளது.

ஒருவர் தமது குடும்பத்துடன் சொந்த இடத்துக்குப்போவதன்மூலம் இயல்பு வாழ்க்கையை சீராக்கிவிட முடியாது. அவரின் உறவினர்கள் அங்கே குடியமர வேண்டும். ஆலயங்கள், பாடசாலைகள், தேவாலயங்கள், வைத்தியசாலைகளும் அங்கே அமைக்கப்படவேண்டும். அப்போது மக்கள் மீளக்குடியமர்ந்து தமது கிராமங்களை நேசிக்கும் போதுதான் இயல்பு வாழ்க்கை ஏற்பட்டுவிட்டது என்று கூறமுடியும்.

மரத்துக்குக் கீழும் கொட்டில்களுக்குக் கீழும் மக்கள் வாழ்கின்ற அவலநிலை தொடரும்போது இயல்பு வாழ்க்கை பற்றிப் பேசமுடியாது.

ஏ-9 பாதையால் வாகனங்கள் போகின்றன; வருகின்றன. பிளாஸ்டிக் பொருள்களையும், ஆடம்பரப்பொருள்களையும் அந்த வாகனங்கள் எடுத்துச் செல்கின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கை மேம்படும் வகையிலான கட்டடப்பொருள்களை எடுத்துச் செல்வது அரிதாகவே உள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்ப வேண்டும். இராணுவ நடவடிக்கையின்போது உடைக்கப்பட்ட வீடுகள் உடன் மீளமைக்கப்படவேண்டும், பாடசாலைகள் புனரமைக்கப்பட வேண்டும், மக்களின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமான கல்வியைச் சீராக்க போதியளவு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும், இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட வைத்தியசாலைகள் மீளமைக்கப்பட வேண்டும், மக்களின் விளைநிலங்களில் உள்ள கண்ணிகள் அகற்றப்படவேண்டும், சுயதொழில் உற்பத்திக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இவற்றை எல்லாம் உடன் செய்வதன் மூலமே மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்கமுடியும்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த 6 கட்டப் பேச்சுக்களிலும் இயல்பு வாழ்க்கை குறித்து பேசப்பட்ட போதும், இதுவரை உருப்படியான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

வடக்கு-கிழக்குக்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அரசிடம் கேட்டுள்ளோம். நாம் கேட்டுள்ளபடி அதிகாரம் மிக்க இடைக்கால நிர்வாகம் எம்மிடம் கையளிக்கப்பட்டால், மக்களின் இயல்பு வாழ்க்கையை சீராக்க முடியும். மக்கள் எதிர்பார்க்கும் வாழ்க்கையையும் அமைத்துக் கொடுக்கமுடியும்.

*கேள்வி:* வன்னிப் பெருநிலப்பரப்புப் பகுதியில் சட்டம், ஒழுங்கைப் பேணும் பணிகளைத் திறம்பட ஆற்றி வரும் தமிழீழ காவல்துறையின் செயற்பாட்டின் அனுபவத்தில் இருந்து யாழ். குடாநாட்டில் இடம்பெறும் சீரழிவுச் செயல்களை சீராக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:* யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களும் சமூகச் சீரழிவுகளும் அதிகரிப்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கும் ஸ்ரீலங்கா பொலிஸ், நீதி, நிர்வாகத்துறை, இராணுவம் உட்பட முப்படைகளும் குடாநாட்டில் செயற்படுகின்றன. இந்த அமைப்புக்களே சட்டம், ஒழுங்கை மீறிச் செயற்படும் நிலை காணப்படுகிறது.

ஒரு குற்றத்தின் பேரில் குற்றவாளி என பொலீஸ் நிலையத்துக்கு அழைக்கப்படும் நபர்கள் உடனேயே விடுவிக்கப்படும் சம்பவங்கள் அங்கு அதிகரித்து வருகின்றதை அவதானிக்க முடிகிறது. கைதுசெய்யப்படும் நபரை சில தினங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதன் மூலம் பல தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், குற்றத்தின் சூத்திரதாரி அகப்படுவார். இத்தகைய நிலை குடாநாட்டில் இல்லை.

வீதிகளில் செல்லும் பெண்கள் பலவித பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இளைஞர்களை வைத்து படையினர் வீதிகளில் செல்லும் பெண்களை காவலரண் பகுதிகளுக்கு அழைக்கின்றனர். அங்கு வைத்து அப்பெண்களுக்கு வேறுவிதமான உணர்வுகள் வரக்கூடிய படங்கள், புத்தகங்களைக் காட்டுகின்றனர். அதன் பின் பெண்கள் மீது சேஷ்டைகளை விடுகின்றனர். இவை தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்தால் பலன் ஏதும் கிடைப்பதில்லை எனப் பெண்கள் கூறுகின்றனர்.

அத்தகைய செயலில் ஈடுபடும் ஆண்களையும், பெண்களையும் அவர்களது பெற்றோர்களையும் அழைத்து நல்வழிப்படுத்த வேண்டியது அவசியமாகும். இந்த நிலை அங்கு இல்லை.

சமூக சீர்கேடுகளை மக்கள் மத்தியில் உருவாக்கும் சக்திகள் இனங்காணப்படவேண்டும். இதன் மூலம் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க முடியும். விடுதலைப் போராட்டத்தை பாதிக்கும் இத்தகைய உத்திகள் குறித்து இளம் சந்ததி அவதானமாக இருக்க வேண்டும்.

பொலிஸாரும், படையினரும் குற்றச் செயல்களுக்குத் துணைபோவதால் தமிழீழ காவல்துறையினர் எப்போது யாழ்ப்பாணத்துக்கு வருவார்கள் என்று நடுத்தர வயதுடைய பிரமுகர்கள் கேட்கிறார்கள்.

குடாநாட்டிற்கு ஆபாசப் படங்களை எடுத்துச்சென்று கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. ஏ-9 வீதி ஊடாக ஆபாசப்படங்களை எடுத்துச் சென்ற பலர் எம்மிடம் சிக்கியுள்ளனர். வியாபாரிகள் போல் வேடமணிந்து ஏனைய பொருள்களுக்குள் பதுக்கி ஆபாசப்படங்களைக் கடத்தியவர்களுக்கு எமது நீதிமன்றம் மூலம் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்டத்தைப் பல வீனப்படுத்தும் நோக்குடன் பலரால் நடத்தப்படும் கலாசார சீரழிவுச் செயற்பாடுகளில் எமது இளைஞர், யுவதிகள் சிக்கக்கூடாது. விழிப்புடன் செயற்பட வேண்டும்.

*கேள்வி:* இடைக்கால நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டு, சட்டம், ஒழுங்கு அதிகாரம் அந்தச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டால், தமிழீழ காவல் துறையினரின் பணி வடக்கு - கிழக்குக்கு முழுமையாக விஸ்தரிக்கப்படுமா?

*பதில்:* இடைக்கால நிர்வாகம் தொடர்பாக நாம் சமர்ப்பித்துள்ள வரைவின்படி, முழு அதிகாரங்களுடன் நிர்வாகம் வழங்கப்பட்டால் வடக்கு - கிழக்கில் சட்டம் - ஒழுங்கைப்பேணும் பொறுப்பை தமிழீழ காவல்துறையே மேற்கொள்ளும். யாழ்ப்பாணத்திலும் முழுமையாக தமிழீழ காவல்துறையே பணிபுரியும். ஸ்ரீலங்கா காவல்துறை விலகும். இருவேறு காவல்துறையினர் ஒரே இடத்தில் பணியாற்ற முடியாது. தொடரும் பேச்சுக்களிலேயே இது குறித்து முடிவுகள் செய்யப்படும்.

வடக்கு - கிழக்கில் மூலைமுடுக்கெல்லாம் தமிழீழ காவல்துறையினர் பணிபுரியும் நிலை ஏற்படவேண்டும். அப்போதுதான் குற்றச்செயல்களை ஒழிப்பதுடன், மக்கள் எதிர்பார்க்கும் இயல்பு வாழ்கையையும் கொண்டுவர முடியும்.

*கேள்வி:* பெருநிலப்பரப்பில் இடம்பெறும் வாகன விபத்துக்களில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழக்கும் ஒருவர் தொடர்பான விசாரணைக்கு யாழ். நீதி நிர்வாக சேவை ஒத்துழைப்பு வழங்குகின்றதா?

*பதில்:* எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் விபத்து மரணமோ, வேறு எந்த மரணமோ சம்பந்தமான விசாரணைகளை தமிழீழ காவல்துறையினரே விசாரணைசெய்து, மரணத்துடன் சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்கின்றனர்.

எமது பகுதியில் இடம்பெறும் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானால் யாழ். நீதி, நிர்வாகத்தின் உதவியை நாம் பெற வேண்டிய தேவையில்லை.

*கேள்வி:* சமாதானப் பேச்சுக்கள் குறித்து....?

*பதில்:* சமாதானப் பேச்சு விடயத்தில் நாம் உறுதியாகவே இருக்கின்றோம். உண்மையான யதார்த்த பூர்வமான சமாதானத்தை எட்டுவதற்காகத் தேவையான பணிகளை நாம் பூர்த்திசெய்துள்ளோம். சமாதானத்தை முன்னெடுப்பதில் தெற்கில்தான் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

**வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக நாம் கையளித்துள்ள வரைவு குறித்துப் பேசி சகல அதிகாரங்களும் கொண்டதாக அந்த நிர்வாகத்தைக் கொண்டுவர வேண்டும்.**

**அந்த நிர்வாகம் மூலம் சட்டம், ஒழுங்கு பேணும் பொறுப்பு எம்மிடம் கையளிக்கப்படுமாயின் மூலை முடுக்கெல்லாம் தமிழீழ காவல்துறையினர் பணிபுரிவர். அதன் மூலம் குற்றச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். அத்துடன் மக்கள் சகல பிரதேசங்களிலும் சுதந்திரமாக குடியமர்வதன்மூலம் இயல்பு வாழ்க்கை மீளத்திரும்பும்.**



**செவ்விகண்டவர்: சுகா**

சர்வதேச அழுத்தத்தின் மத்தியில் சமாதான முயற்சிகள் நல்ல முறையில் நகர்த்தப்படும் நேரத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் சமாதான நகர்வு ஸ்தம்பித நிலையில் உள்ளது. இதற்கான முழுப்பொறுப்பையும் தெற்கு அரசியல்வாதிகளே ஏற்கவேண்டும்.

---

## 'பிக்கப்' வாகனம் பழுது

சண்டிலிப்பாய்,நவ.13

இலங்கை மின்சாரசபையின் சித்தன்கேணியிலுள்ள வட்டுக்கோட்டையின் அத்தியட்சகர் பணிமனைக்கென மின்சாரசபையினால் வழங்கப்பட்ட 'பிக்கப்' வாகனம் கடந்த மூன்று மாதங்களாகப் பழுதடைந்த நிலையில் உள்ளது.

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய பல்வேறு இடங்களில் மின்சாரம் சம்பந்தமான வேலைகளை இந்த வட்டுக்கோட்டை மின் அலுவலகமே மேற்கொண்டு வருவதால், 'பிக்கப்' வாகனத்தின் சேவை இங்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது என்று அத்தியட்சகர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-135)

---

வடக்கு - கிழக்கில் பிரதேச ரீதியாக

## மாதிரி முன்பள்ளிகளை நிறுவுவதற்கு ஏற்பாடு

வலி.தெற்கு,நவ.18

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் வடக்கு - கிழக்கில் மாதிரி முன்பள்ளிகளை பிரதேச ரீதியாக அமைக்க வடக்கு - கிழக்கு பிரதேச முன்கல்வி நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே, வன்னி மாவட்டத்தில் உள்ள முல்லைத்தீவு, நெடுங்கேணி மற்றும் மன்னார் பிரதேசங்களில் மூன்று மாதிரி முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


அடுத்ததாக, கிளிநொச்சி பிரதேசத்தில் 15 லட்சம் ரூபா செலவில் மிகவும் பிரமாண்டமான மாதிரியான முன்பள்ளி அமைக்க பிரதேச முன்கல்வி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

குழந்தைகள் வெளிச்சூழலை ஓரளவு உணரக் கூடியவாறான உபகரணங்களைக் கொண்டுள்ளதுமான கட்டுமானத்தைக்கொண்டு இம் முன்பள்ளி அமைவதே இதன் சிறப்பம்சமாகும்.

மட்டக்களப்பில் உள்ள இலுப்பையடிச்சேனை என்ற இடத்திலும் தற்போது இதேபோன்ற முன்மாதிரியான முன்பள்ளி கல்விக்கூடம் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(எ-152)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 18 - 01 - 1926

விண்ணில் 18 - 11 - 2000

**பொன்னம்பலம் தர்மலிங்கம்**

அப்பா! என்றும் உங்கள் நினைவுடன்:

\- குடும்பத்தினர்.

*39/1, A.V. வீதி,*
*கொழும்புத்துறை.*

(24062) (14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 09 - 11 - 1922



அம்பாள் அடியில் 28 - 11 - 2002

நயினை அமரர்

**இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை**

திதி: 18-11-2003

மாதங்கள் பன்னிரண்டு ஓடி மறைந்ததையா
மறாதையா அத்துயரம் ஆண்டுபல சென்றாலும்
பிரியமாய் எமை வளர்த்து நல்வாழ்க்கை தந்தவரே!
பிரிய மனம் வந்தா திடீர் பயணம் சென்றுவிட்டீர்?
அகிலமெலாம் போற்றி அதிசயிக்க வாழ்ந்தவரே!
அன்பின் திருவுருவே ஆறுதலைத் தாரீரோ!
'அமுதசுரபி' யில் நின்று அமுதளித்து மகிழ்ந்தவரே!
அம்பாளின் பாதத்தைச் சென்றடைந்து விட்டீரே!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

*உங்கள் பிரிவால் துயருற்று ஆத்மசாந்திக்காக*
*இறைவனைப் பிரார்த்திக்கும்*

*2 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

\- குடும்பத்தினர்.

(24757) (14)

## சட்டவிரோத மின் இணைப்பு பெறுவோர் மீது நடவடிக்கை

சண்டிலிப்பாய், நவ.18

இலங்கை மின்சார சபையின் வடுக்கோட்டை மின்சார அத்தியட்சர் பிரிவில் சட்ட விரோதமாக மின்பெறுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் இளவாலை பகுதியில் இருவீடுகளிலும், தொல்புரம் பகுதியில் ஒரு வீட்டிலும் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெறப்பட்டுவந்தமை மின்சார சபை அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டு இதற்கு பயன்படுத்தப்பட்ட மின் வயர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

(எ-135)

## முன்பள்ளிகளை அதிகரிக்க ஏற்பாடு

வலிகாமம் தெற்கு,நவ.18

2004 ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் முன்பள்ளி கல்வி நிலையங்களை அதிகரிக்கவும்:-

முன்பள்ளி கல்வி நிலைய ஆசிரியர்களுக்கான வேதனத்தை அதிகரித்து வழங்கவும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆலோசித்து வருகின்றது.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தற்போது இயங்கி வரும் 349 முன்பள்ளி கல்வி நிலைய ஆசிரியர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தற்போது மாதாந்தம் ஆயிரம் ரூபாவினை வேதனமாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(எ-152)

## தபால்பெட்டி திருட்டு!

வலி.வடக்கு,நவ.18

மல்லாகம் சந்தியில் இருந்த தபால்பெட்டி இனம் தெரியாதவர்களினால் கடந்த சனியன்று இரவு திருடப்பட்டுள்ளது.

மல்லாகம் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள தனியார் கடையொன்றின் வாசலில் இந்த தபால் பெட்டி கடந்த பல வருடங்களாக இருந்து வந்தது.

சனியன்று இரவு பெய்த கடும் மழையைத் தொடர்ந்து திருடர்கள் இந்த தபால் பெட்டியைத் திருடிச் சென்றுள்ளனர் எனக் கூறப்பட்டது.

தபால்பெட்டி திருட்டுப் போயுள்ளமை தொடர்பாக மல்லாகம் உப தபால் அதிபர் தெல்லிப்பழை பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

(எ-86)


### உடன் தேவை

றொலெக்ஸ் பேக்கரியில் மேற்பார்வை செய்வதற்கு தகுதி உடையவர்கள் நேரில் வரவும்.
(வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு)
118,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(14) (24786)



### இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567

(சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-31108) (14-34-21)


## வாழ்த்திப் பாராட்டுகின்றனர் லாலா சோப் ஸ்தாபனத்தினர்



சிறந்த சமூக சேவையாளரும்
சிவா நறுமணப்பூங்கா - [illegible]
இன்டஸ்றீஸ் நிறுவனங்களின்
தொழிலதிபருமான

**திரு.துரைச்சாமி குருநாதசிவம்**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு அவர் நீடூழி வாழவும் சேவை தொடரவும் வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

உரிமையாளர்,
லாலாசோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

(சி-31341) (14-21-26)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

18-11-2003

HAPPY



BIRTHDAY

செல்வன் **உதயகுமாரன் சுபிதன்**

யாழ்ப்பாணம் அத்தியடியில் வசிக்கும்
உதயகுமாரன் - கீதாஞ்சலி
**தம்பதிகளின் செல்வப்புதல்வன் சுபிதன்**

அவர்கள் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (18.11.2003) செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் அத்தியடியில் உள்ள தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டி, பேரன்மார், பேர்த்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் யாவரும் யாழ்.அத்தியடி சிதம்பர நடராஜா வீரகத்தி விநாயகர், நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் அருள்பெற்று பல்கலையும் பெற்று சீருஞ்சிறப்புடன் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

30/16, குறுக்குவீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

ந.உதயகுமாரன் (அப்பா)
'சிங்கப்பூர் ஜுவல்லறி'
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-31343) (14-21-26)

## இல்லற வாழ்வில் இனிதே இணைந்து பொன்விழா காணும்



திரு.திருமதி
**மண்டலேஸ்வரம் தங்கரத்தினம்**
தம்பதிகள்
**18.11.2003**

இன்று இல்லற வாழ்வில் பொன்விழா காணும் தம்பதிகளைப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ இறைவனை வேண்டும் :

மக்கள், மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்,
நண்பர்கள்.

அமைதி இல்லம்
ஆலடி வேள்,
ஆனைக்கோட்டை.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது பாடசாலை அதிபரும்
சிறந்த சமூக சேவையாளருமாகிய



**திரு.அரியரட்ணம் சாள்ஸ் அரியகுமார்**

அவர்கள் 12-11-2003 அன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் மேலதிக மாவட்ட நீதிவான் **திருமதி எஸ்.நந்தசேகரன்** அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவரைப் பாராட்டுவதோடு, அவர் இன்னும் பல சேவைகளாற்றி பல்லாண்டு காலம் வாழ்ந்து மேலும் பல உயர்வு கள் பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,
யா/உடுத்துறை மகாவித்தியாலயம்,
தாளையடி

(சி-31339) (14-21-26)

# சமூகப் பாதுகாப்புச் சூழ்நிலை குடாநாட்டில் திருப்தியளிக்கிறதா?

குடாநாட்டில் 2004ஆம் ஆண்டில் மீளக்குடியமர்கின்ற மக்களுக்கு அவசர உணவு, குடியிருப்பு, புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளை கண்டறிவதற்கான ஆய்வுப் பட்டறையொன்று யாழ். அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள அரச, அரச சார்பற்ற, சர்வதேச நிறுவனங்களின் அதியுயர் மட்ட அதிகாரிகள் பங்குபற்றினார்கள். மேற்படி கருப்பொருள் தொடர்பான பல்வேறு ஆலோசனைகளை இதில் பங்குகொண்ட அதிகாரிகள் முன்வைத்தார்கள்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் யாழ். மாவட்ட வெளிக்கள நடவடிக்கைகளுக்கான தலைமை அதிகாரி **(Head Field Officer)** கியூசுகூ முற்றா ஒரு கருத்தை முன்வைத்தார்.

அடுத்த ஆண்டு மீளக்குடியமரப் போகின்ற மக்களுக்கான உதவித் திட்டங்கள் பற்றி ஆராய்கிறோம். ஆனால், எதிர்பார்க்குமளவிற்கு அடுத்த ஆண்டு இங்கு மக்கள் குடியமர வரப்போவதில்லை. ஏனெனில், மக்கள் வந்து குடியமர்ந்து வாழக்கூடிய சமூகப் பாதுகாப்புச் சூழ்நிலை யாழ். குடாநாட்டில் இல்லை என்று அவர் தனது கருத்தை முன்வைத்தார்.

இன்று குடாநாட்டில் வசிக்கின்ற சாதாரண பிரஜைகள் ஒவ்வொருவரும் உணர்ந்துகொண்டுள்ள ஒரு சூழ்நிலையை ஒரு வெளிநாட்டுப் பிரஜையும் நன்குணர்ந்திருப்பது இன்றைய குடாநாட்டு மக்களின் சமூகப் பாதுகாப்பு நிலையைப் பலரும் நன்குணர்ந்து கொண்டுள்ளதன் வெளிப்பாடாகும்.

இந்நிலையில், யாழ். குடாநாட்டின் சமூகப் பாதுகாப்பு நிலைமை குறித்து பிரமுகர்கள், பொது மக்கள் என்ன கூறுகிறார்கள் என்பது பற்றி அறிய முனைந்தோம்.

அவ்வாறு பெறப்பட்ட கருத்துக்களே இவை:-

## பிரதேச செயலர்

வலி.வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா:-

சமூகப் பாதுகாப்புக் குறித்த அச்சம் நிலவுவதாகக் கூறப்படுவதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. சமூகப் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு குடும்பமும் தன்நலத்தில், தன்வீட்டில் நிம்மதியாக கௌரவமாகவாழும் நிலை. அது இல்லையென்றால் சமூகப் பாதுகாப்பு இல்லை என்று தானே கருதவேண்டியுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலே இருக்கும் 45 கிராம அலுவலர் பிரிவுகளில் 12பிரிவுகள் மட்டுமே முழுமையாக மக்கள் வசிக்கும் பகுதிகளாகும். 7 கிராம அலுவலர் பிரிவுகளில் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே மக்கள் வசிக்கிறார்கள். 23ஆயிரத்து 351குடும்பங்கள் வசித்த இந்தப் பிரதேச செயலர் பிரிவில் இன்று 15ஆயிரத்து 457குடும்பங்களைச் சேர்ந்த அறுபத்தையாயிரத்து 33பேர் இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள். இதில் 60சதவீதமானோர் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் வாழ்கிறார்கள். இவர்கள் மீளக்குடியமர வந்தால் தமது சொந்த இடங்களில் குடியமர முடியுமா? இவர்கள் முழுப்பேரும் குடியமர வந்தால் இருப்பிட வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்குரிய அடிப்படைப் பாதுகாப்பை வழங்கமுடியுமா? இன்று, வாழ்விட பாதுகாப்பு என்பதே பெருமளவு மக்களின் பிரச்சினையாகவுள்ளது.



# எரியும் பிரச்சினைகள்

# பலரும் சொன்னவைகள்

இவைகள் பெரும் வதிவிடப் பாதுகாப்புப் பிரச்சினைகள். இதைவிட அவமானப்படுத்தப்படுதல் ஒரு பிரஜைக்கு நிகழ்கின்ற மிகப்பெரிய சமூகப் பாதுகாப்பின்மையாகும். இந்நிலை இன்று குடாநாடெங்கும் பரவியுள்ள பேரபாயமாகவுள்ளது. மூத்த பிரஜைகள், பெண்கள், கௌரவமான குடும்பஸ்தர்கள் என்போர் இளைஞர் குழுக்களால், வன்முறை கும்பல்களால், ஆயுததாரிகளால் பல்வேறு வகையில் உடல்ரீதியாகவோ, உளரீதியாகவோ அவமானப்படுத்தப்படுகிறார்கள்.

### ஒழுக்கமின்மை

இன்று மாணவர்கள் பாடசாலைகளில் பரீட்சைக்காக கற்கிறார்களேயன்றி ஒழுக்கம், விழுமியங்கள் என்பன பற்றிக் கற்பதில்லை. இதுவே இச்சமூகச் சீர்கேடுகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. இதைப் படிப்படியாக நீக்கவேண்டும். குடாநாடு 2தசாப்த காலமாக சட்டம், ஒழுங்கு, சமூகப் பாதுகாப்புநிலை என்பன பற்றிய அனுபவ அறிவினைப் பெறாத சந்ததிகளால் நிறைந்துள்ளது. கடந்த சில வருடங்களுக்கு முன் சட்டம், ஒழுங்கைக் கையாண்டவர்கள் அதை இறுக்கமாகப் பேணியதால் சமூகநிலை கட்டுக்குள் இருந்தது. ஆனால், இன்று அப்படியில்லை. சுதந்திரம், உரிமை என்பன அளவுக்கதிமாகப் பயன்படுத்தப்பட்டு அது பிறருடைய சுதந்திரம், உரிமைகளை பாதிப்பதாக அமைந்துவிட்டது. எனவே, பெற்றோர்கள், சமூகப் பெரியோர்கள் பொறுப்புணர்வோடு சமூகவிழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும்.

## பொலீஸ் அதிகாரி

சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.பாலித பெனாண்டோ:-

என்னைப் பொறுத்தவரை குடாநாட்டு மக்கள் யுத்தகாலங்களை விட இப்போது சமூகப் பாதுகாப்புடனேயே வாழ்கிறார்கள்" என்றே கூறுவேன். ஏனென்றால், யுத்தத் தாக்கங்கள், தடைகள், விசாரணைகள் என்பன இப்போது இல்லை. அவர்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள், வாழ்கிறார்கள். பொலீஸார் அவர்களுடைய பாதுகாப்பை நல்லமுறையில் உறுதிசெய்து வருகிறார்கள்.

ஆயினும், கௌரவமான வாழ்விற்கான சில அச்சுறுத்தல்கள் ஏற்படக் காரணம் சமாதானத்தின் காரணமாக மக்கள் குறிப்பாக இளைஞர்கள் தமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தை அளவுக்கதிகமாகப் பயன்படுத்துவதுதான்.

### அளவுக்கதிகமான சுதந்திரம்

மதுபாவனை, சினிமா, பொழுதுபோக்குகள் எங்கும் எல்லா இளைஞர்களும் பயன்படுத்துபவைதான். இங்கு அவற்றை நீண்டகாலமாக அனுபவிக்காத இளைஞர்கள், அவை கிடைத்தவுடன் அவற்றை மற்றவர்களுடைய சுதந்திரத்தைப் பாதிக்குமளவுக்கு அளவுக்கதிகமாக அனுபவிக்கிறார்கள். கசிப்பு உற்பத்திகூட அவ்வாறுதான். ஒருவர், தான் விரும்பிய தொழிலைச் செய்யும் ஜனநாயக உரிமை இலங்கை நாட்டில் வழங்கப்படுகிறது. ஆனால், அத்தொழில் சமூகத்திலுள்ள ஏனையவர்களுக்கு அச்சுறுத்தலாக, ஆபத்தாக அமையுமானால் அதை சட்டம் தடை செய்யும். எனவேதான் நாம் கசிப்பு உற்பத்தி உட்பட சமூகப் பாதிப்பை ஏற்படுத்தும் ஏனைய நடவடிக்கைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தி வருகிறோம்.

இப்போது மக்கள் யுத்த அச்சுறுத்தலிலிருந்து விடுபட்டு யுத்த பயமின்றி வாழ்கின்றனர். இதனால் தமக்கு அளவுக்கதிகமான சுதந்திரம் கிடைத்துவிட்டதாகக் கருதி தமக்குக் கிடைத்த சுதந்திரத்தின் பயன்பாட்டு எல்லை - வரம்பு - தெரியாமல் - நடந்துகொள்கிறார்கள்.

இன்னொரு பக்கம் பலமக்கள் பலவிதமான அச்சுறுத்தல்களுக்கு ஆளாகிறார்கள். உதாரணமாக தாக்கப்படுதல், பெண்களுக்கெதிரான வன்முறைகள், களவு, மோசடி போன்றன. இவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் அச்சமின்றி பொலீஸாரை அணுகி முறைப்பாடு செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன். பொலீஸார் பாரபட்சமின்றி தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

### மொழிப்பிரச்சினை

இப்போது பொலீஸாரை அணுகுவதில் மொழிப்பிரச்சினை தொடர்பாக தயங்கத் தேவையில்லை. குடாநாட்டிலுள்ள அனைத்துப் பொலீஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள், வாக்குமூலங்கள் என அனைத்தும் தமிழில் ஏற்கப்படுகின்றன. தமிழ் தெரிந்த பொலீஸ் அதிகாரிகளும் கடமையிலுள்ளனர். பொலீஸார் பணத்தைப் பெற்றுக்கொண்டு பக்கச் சார்பாக செயற்படுகிறார்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. இது முழுக்கத் தவறானது. ஒரு சிலர் விடும் தவறுகளால் அனைத்துப் பொலீஸாரையும் தவறாக எடை போடாதீர்கள். நாங்கள் எப்போதும் பக்கச் சார்பின்றி சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்போம்.

## பதில் நீதிவான்

மல்லாகம் நீதிமன்ற பதில்நீதிவான் வசந்தசேனன்:-

சமூகத்தின் அடிப்படை அலகுகளான குடும்பங்கள் தற்காலத்தில் கட்டுக்கோப்பானவையாக அமையாததே இந்த சமூகப் பாதுகாப்பின்மைக்கு காரணமென நான் கருதுகிறேன். ஒழுக்கம், விழுமியம், நற்பண்புகள் என்பன குடும்பங்களிலிருந்தே இளம் சந்ததிகளுக்கு கையளிக்கப்பட வேண்டிய சொத்துகளாகும்.

ஆனால், இன்று குடும்பங்கள் அவ்வாறில்லை. கட்டுப்பாடு, பொறுப்புணர்வுமிக்க ஆண்களையோ, பண்பாடுகளைப் பேணிக்காக்கும் பெண்களையோ அதிகளவான அளவில் குடும்பங்களில் காணமுடிவதில்லை. இன்று இருதார மணங்கள் நீதிமன்றுக்கு அடிக்கடி வருகின்ற பிரச்சினையாகிவிட்டது. இதில் ஒன்று சட்டரீதியாகப் பதியப்பட்ட ஒரு திருமணமாகவும், மற்றையது சட்டரீதியற்ற திருமணமாகவுமே அதிகம் உள்ளது. இதனால், மேற்படி குற்றங்களைப் புரிகிறவர்களை சட்டரீதியாகத் தண்டிக்கக்கூட முடிவதில்லை. இதேபோல, பெண்கள் தொடர்பான பிரச்சினைகளும் நீதிமன்றுக்கு வருகின்றன. இன்று திருமணங்கள் சமூக அந்தஸ்து வாய்ந்த குடும்ப அலகின் தொடக்கங்களாக அமையாமல் வெறும் பாலியல் தேவைகளுக்காக நடப்பவை போலாகிவிட்டன. ஆண்கள் உழைப்பில் பெரும்பகுதியை கசிப்பு, மது, சினிமா போன்றவற்றில் செலவிட பெண்களும் சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள் என்பவற்றில் மூழ்கிக் கிடக்கிறார்கள். இந்நிலையில், அடுத்து உருவாகிவரும் சந்ததி எப்படி ஒழுக்கம், பொறுப்பு நிறைந்ததாக உருவாக முடியும்?

### வருமான மையங்கள்

இன்று பாடசாலைகள் மாணவர்களை பரீட்சைக்குத் தயார்செய்யும் இடங்களாகவே மாறிவருகின்றன. சமூக ஒழுக்கங்களை வளர்த்தெடுக்க வேண்டிய ஆலயங்களில் பலவும் வருமானம் தேடும் மையங்களாக மாற்றப்பட்டுவிட்டன.

ஆனால், புராதன யாழ்ப்பாணத்தின் பண்பாட்டை, தமிழை, சமயத்தை கட்டிக்காத்தவர்கள் சமயக்குருமார் என்பதை மறுக்கமுடியாது. இன்றும் சிலர் அவ்வாறு உள்ளனர். ஆனால், பலர் தமது சமய, சமூகப்பொறுப்பை மறந்ததாலேயே இன்று ஆன்மீக நாட்டம் இல்லாத சந்ததி உருவாகி சமூகப்பாதுகாப்புக் கேள்விக்குறியாகியுள்ளது.

திருவிழாக்களுக்காக பல லட்சக்கணக்கில் செலவழிக்கின்ற மத வழிபாட்டுத்தல நிர்வாகங்கள், சில ஆயிரங்களைச் செலவழித்து தமது கிராமப் பகுதியிலுள்ள வறியமாணவர்கள் 5பேருக்கு கல்வி புகட்டினாலே இன்று வளமான ஒரு சந்ததியை உருவாக்கமுடியும்.

### வேதனையான விடயம்

சமாதானம் ஏற்பட முன்பு போரின் விளைவுகளும் ஒவ்வொரு வீட்டிற்குமுரிய பிரச்சினையானது வேறுவிடயம். போரின் பின் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் எமது சமூகத்தின் மக்களே எமது சமூகத்திற்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளமை வேதனையான விடயம். இதனைக் கட்டுப்படுத்த பொலீஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். பொலீஸாரின் கண்காணிப்பு வீச்சு எல்லை ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள்ளேயே உள்ளது. அது விஸ்தரிக்கப்படவேண்டும். சமூகக் குற்றச் செயல்களை தீவிரமாகப் பொலீஸார் கட்டுப்படுத்தவில்லை. இதற்கு பொலீஸ் திணைக்களத்திலுள்ள ஆள்பற்றாக்குறை ஒரு காரணமென்றாலும் அந்தப் பொறுப்பு பொலீஸாருக்கே உரியது.

## மாணவிகள்

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவிகளான செல்விகள் கணேசலிங்கம் டெய்சி, ஜெயபாலசிங்கம் தனுஷியா ஆகியோர் இணைந்து கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் சமூக பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உருவாகியுள்ளன என்பதைவிட பெண்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை என்பதுதான் நூறுவீத உண்மையாகும். மாலை 6.00மணி கடந்துவிட்டால் ஓர் ஆணின் துணையுடன்தான் பெண் வெளியே செல்ல வேண்டியுள்ளது.

சமூகத்தின் தூண்களாக இருக்க வேண்டிய இளைஞர்கள் சீர்கேடான சினிமாக்களைப் பார்த்து வன்முறைவாதிகளாக மாறிவிடுகிறார்கள். தங்கள் வீரத்தை நல்ல செயல்களுக்காக, நீதியை நிலைநாட்ட அல்லது பெண்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தினால் தவறில்லை. ஆனால், சமூகச் சீரழிவான செயல்களுக்கு - பெண்களைக் கேலிசெய்ய, பெரியவர்களை அச்சுறுத்த தமது ஆற்றலை இளைஞர்கள் பயன்படுத்துவது வேதனைக்குரியது. இதற்கு அவர்களது பெற்றோர்களின் தவறான வழிநடத்தலே காரணம். வெளிநாட்டுப் பணத்தைக் கொட்டி மகன்களுக்கு தேவையானதை வாங்கிக் கொடுப்பவர்கள் தங்கள் பிள்ளைகள் நல்ல வழிகளில் செல்கிறார்களா? என்பதை அவதானிக்க வேண்டும். அவர்களது நண்பர்களின் நடத்தைகளையும் கவனிக்கவேண்டும். ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் என்பதுபோல், ஒரு விஷமி போதும் பல இளைஞர்களைச் சீரழிக்க.

### பெண்களும் காரணம்

ஆண்பிள்ளைகளை மட்டும் நாம் குறைகூறவில்லை. இன்றைய பெண்பிள்ளைகள் அணியும் ஆடைகளே ஆண்களை தவறான எண்ணங்களோடு பெண்களை அணுகத் தூண்டுகின்றன. உடலோடு ஒட்டியவாறு இவர்கள் அணியும் ஆடைகள், உடலில் ஆடையைத் தேடும் நிலைதான் உள்ளது. பிறகு ஆண்களை குறை சொல்லி என்ன பயன்? இளம்பெண்கள் நாகரிகம் என்ற போர்வையில் அநாகரிகமாக ஆடை அணிவதை அவர்களது பெற்றோர், சகோதரர்கள் எவ்வாறு அனுமதிக்கிறார்களோ தெரியவில்லை? தன் தங்கை அல்லது மகள் கீழ்த்தரமான ஆடை அணிவதை அவளது அண்ணன் அல்லது தாய் தடுக்காதிருப்பது மேலைத்தேய நாகரிகத்துள் நமது சமூகம் மெல்ல மெல்ல மூழ்கப்போவது போலவே தெரிகிறது. வெளிநாட்டில் கடுங்குளிர் காரணமாக உடலோடு ஒட்டிய ஆடை அணிகிறார்கள். இந்த வெப்பநாட்டில் அது தேவையா? வெளிநாட்டு மெக்கானிக்மார் முழங்காலில் அமர்ந்து வேலை செய்யும்போது தமது முழங்கால் பகுதி ஆடை தேயாமல் இருக்க மேலதிகமாக ஒரு துணித்துண்டு வைத்துத் தைக்கிறார்கள். இதை எங்கள் நாட்டு இளைஞர்கள் "ஸ்டைல்" என்று தைத்துக்கொண்டுதிரிவது, வேடிக்கையானது.

எனவே, நாங்கள் அந்நிய கலாசார சூழலுக்குள் நின்றுகொண்டு எமது சமூகக் கட்டுப்பாடுகளை பேணமுடியாது. எமது சமூகம் முதலில் பழையபடி எமது கலாசாரச் சூழலுக்குள் - நாம் நாமாக - வாழ முனைந்தாலே சமூகப் பாதுகாப்பைப் பேணமுடியும்.

எழுத்து வடிவம்:-
**மார்க் அன்ரனி**

# கூட்டுறவுச் சங்கம் வேண்டுகோள்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பண்டத்தரிப்பு சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில மண்ணெண்ணெய் விநியோகத்தை இயந்திரமயப்படுத்தி மீற்றர் சாதனம் மூலம் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இவ்வாறு சங்க நிர்வாகம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த மண்ணெண்ணெய் விநியோகத்தை இயந்திர மயப்படுத்தி மீற்றர் மூலம் விநியோகம் செய்யப்படுமிடத்து மண்ணெண்ணெய் விநியோகத்தை பொதுமக்களுக்கு விரைவாக மேற்கொள்ளமுடியும் என்று சங்க வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.(எ-135)

# 68 தும்பு ஆலைகள் பூட்டு! 3 ஆயிரம் பேர் வேலையிழப்பு

குருநாகல்,நவ.18

குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய, பண்டுவஸ்நுவர, வாரியப்பொல ஆகிய பிரதேசங்களில் 68 தும்பு ஆலைகள் இழுத்து மூடப்பட்டதனால் சுமார் 3 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

கடந்த பல மாதங்களாக தென்னமட்டைகளுக்கு (உரிமட்டை) பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதே ஆலைகள் மூடப்பட்டதற்கான காரணமாகும்.

தும்பு ஆலைகள் மூடப்பட்டதனால இயந்திரங்கள் துருப்பிடித்து வருவதாக அவற்றின் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(எ)

உ

சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் கார்த்திகை மாதம் 04ஆம் நாள் (20.11.2003) வியாழக்கிழமை அத்த நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 8.12 மணி தொடக்கம் 10.08 மணி வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**கீதராஜ்**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**கலா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு வண்ணை லக்சுமி நாராயணன் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி அப்புலிங்கம்
(லிங்கம் கூல்பார்),
75/17, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். Tel: 222-2534

திரு.திருமதி கந்தசாமி
77, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(புளியங்கூடல்)

(24771) (26-14-21) (இருவீட்டார் அழைப்பு)

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை:- **உத்தியோக உதவியாளர் தரம் - 03**

தகைமைகள்:- க.பொ.த.(சாதாரணதர) தேர்வில் கணிதம் (கணிதம் 42/ கணிதம் II), தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த.(உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- 3,670 - 5,070 / 70 X 20 + 4,000 (7,670 - 9,070)


அகவை எல்லை:- 19 - 25

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "ஆள்சேர்ப்புக்கான வேண்டுகை" எனக் குறிப்பிடப்பட்டு 2003/12/15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலாளர்,**
**ஆளுகைப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு:- நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவஞ்சலில் (மேலாளர், ஆளுகைப்பகுதி நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை, பரந்தப்போக்கு, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம். (C/31332) (26-24-14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திரு.ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்**

அவர்கள் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமைக்காக அவரை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

இவரின் பணி மேலும் சிறக்க இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

அ.நல்லதம்பி,
வடமாகாண தென்குப் பயிர்ச்செய்கையாளர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(சி-31345) (25)

## யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் உற்சவகால சீட்டிழுப்பு

கடந்த 15-11-2003 அன்று யாழ்.சென்ஜேம்ஸ் தேவாலய முன்றிலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. அதன் முடிவுகள் வருமாறு:

1. முதலாம் பரிசு: 3745
   (சரஸ்வதி விலாஸ் அன்பளிப்பு, கே.கே.எஸ்.வீதி)
2. இரண்டாம் பரிசு: 2466
   (அபிநயா மல்ரி எலக்ரோனிக், மானிப்பாய்)
3. மூன்றாம் பரிசு: 5659
   ([illegible])

ஏனைய ஆறுதல் பரிசுகள்:

| | | |
|---|---|---|
| 1. 19709 | 2. 18171 | 3. 4911 |
| 4. 4183 | 5. 19043 | 6. 18449 |
| 7. 10893 | 8. 8560 | 9. 6237 |
| 10. 14820 | | |

எதிர்வரும் 20-11-2003 இலிருந்து 20-12-2003 இற்குள் (நேரம் 9.30-1.00 மணிவரை) வேலை நாள்களில் பரிசினை நேரில் வந்து எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பரிசுப்பொருள்களை அன்பளிப்புச் செய்தவர்களுக்கும் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை விற்பனைசெய்ய உதவியவர்களுக்கும் மற்றும் சீட்டுக்களைப்பெற்று எமக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

31/1, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். - நிர்வாகத்தினர்.
(24787) (14-21)

## உவகையுடன் வாழ்த்துகின்றோம்

வன்னியில் நடைபெற்ற "ஈழப்பிரியா" ஞாபகார்த்த கராத்தே சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டு



75 Kg இற்கு மேற்பட்ட நிறையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவன் **கந்தசாமி திலீபன்** 3 ஆம் இடத்தை அடைந்து வெண்கலப் பதக்கம் (முதலாம் கறுப்புப்பட்டி) பெற்றுக்கொண்டார்.

40 Kg இற்கு மேற்பட்ட நிறையில் மானிப்பாய் மகளிர் கல்லூரி O/L மாணவி **றஞ்சன் சுமணா** 4 ஆம் இடத்தை (முதலாம் கறுப்புப் பட்டி) பெற்றுக்கொண்டார்.

இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்: S.K.கேதீஸ்வரன்
5 ஆம் கறுப்புப்பட்டி - யாழ். மாநகரசபை பாதுகாவலன் -

இவர்களை உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

**JKDS கிளப்,**
33/16, [illegible] வீதி, அரியாலை மேற்கு, அரியாலை.
T.P.: 3403
கிளை: கோண்டாவில் கிழக்கு.

இத்தகைய ஒரு வாய்ப்பையளித்து எம்மை ஊக்குவித்து நிற்கும் தமிழீழ விளையாட்டுத் துறையினருக்கு எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மகளிருக்கான வகுப்புகள் ரஞ்சன் சுமணாவால நடத்தப்படுகின்றன.

# அதிகரித்த உரப் பாவனையால் மண்தன்மை மாற்றமடைகின்றது

## முன்னாள் பெரும்பாக உத்தியோகத்தர் உரை

வலி.தெற்கு,நவ.18

"யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகளால் வயல் நிலங்களில் போடப்படும் அதிகரித்த பசளைப் பாவனையால் மண்ணின் சூழ்த்தன்மை மாற்றமடைந்து நிலத்தடி நீர் நச்சுத்தன்மை செறிந்ததாகவும், உவர்த்தன்மை பொருந்தியதாகவும் மாற்றமடைகின்றது."

உடுவில் கமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனத் தலைவர்களின் கூட்டத்தில் உரையாற்றிய யாழ்ப்பாணம் கமநல சேவை திணைக்களத்தை சேர்ந்த புலோலி கமநல சேவை நிலைய முன்னாள் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.உருத்திரேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ந.குழந்தைவேல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எஸ்.உருத்திரேசன் மேலும் கூறியதாவது:-

எமது மண்ணை நாம் சரியான முறையில் பாதுகாக்கவேண்டும். இன்றைய உணவுத் தேவையை மட்டும் பூர்த்திசெய்தால் போதும் என்ற எண்ணத்தில் அதிக உரப்பசளையை இட்டு மண்ணின் வளத்தை கெடுத்துக்கொள்ளக் கூடாது. எதிர்கால சந்ததிக்கும் எமது மண்ணே உணவு தானியத்தைக் கொடுக்கவேண்டும்.

உரிய காலங்களில் பயிர்களுக்கு தேவையான வளங்களை - பசளைகளை - அளவோடு வழங்க வேண்டும்.

1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் நிலப்பயிர்களுக்கு போடப்படும் இரசாயன உரம் விவசாயிகளால் அளவுக்கதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மண் பழுதடைந்து பசளையை நீடித்த நாள்களுக்குச் சேமித்து வைத்திருக்கும் தன்மையை இழந்து வருகின்றது. இரசாயன பசளைகளுடன் இயற்கைப் பசளைகளையும் நாம் கலந்து பயன்படுத்த வேண்டும்.

1960களில் உணவு உற்பத்தித் திறன் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகமாகவும் ஆரோக்கியமானதாகவும் இருந்தது. இன்று அவை மாற்றமடைந்து மண்ணில் காணப்படும் மண்சூழ் பதார்த்தம் குறைவடைந்து விட்டது.

மண்ணில் உள்ள இரசாயனத் தன்மை நாம் போடும் பசளையை உறிஞ்சி, மண்ணைக் கூழாக்கி வைத்து, அதன் தேவையைப் பல்காலங்கள் பிடித்துவைத்து வழங்குகின்றது. மண்ணில் போடப்படும் அதிகரித்த இரசாயனப் பசளையால் மண்ணின் சூழ்த்தன்மை மாற்றமடைந்து இன்றைய நிலையில் நாம் போடும் பசளையை உடன் பாவனைக்கு மட்டுமே உறிஞ்சக் கூடியதாக உள்ளது.

மேலதிகமாகப் போடப்படும் இரசாயன பசளை மண்ணுக்கு செறியாது வீணாகி, நிலத்தின் கீழ்ப்பாகத்தை சென்றடைகிறது. அங்கு அவை சுண்ணாம்புத் தன்மையாகி நீருடன் கலக்கின்றது. இதனால் நிலத்தின் அடியில் காணப்படும் நன்னீர் நஞ்சடைவதோடு உவர்த்தன்மையாகவும் மாறிவிடுகின்றது.

விவசாயத்தில் நட்டமடைவதாக கூறப்படுவதைத் திட்டமிட்டு விவசாயத்தை மேற்கொள்வதன் மூலம் நிவர்த்தி செய்யலாம். கமக்காரர் அமைப்புகள் தத்தம் பகுதியில் திட்டமிட்டு விவசாயத்தை மேற்கொள்வதன் மூலம் வெற்றியும் லாபமும் பெறலாம்.

ஒரு கமக்காரர் அமைப்புக்குட்பட்ட பகுதியில் அனைத்து விவசாயிகளும் ஒரே பயிரை ஒரே நேரத்தில் மேற்கொள்வதால் உற்பத்தி அதிகரித்து அதன் விலை வீழ்ச்சியடைகிறது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. விவசாய அமைப்புகள் தமது அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி இவ்வளவு நிலத்தில் இன்ன பயிரை மேற்கொள்ள வேண்டும் எனத் திட்டமிட்டு அவற்றை ஒவ்வொரு முறையும் விவசாயிகளிடம் மாற்றிமாற்றி கொடுத்து செய்கைபண்ணுவதன் மூலம் அளவான உற்பத்தியை மேற்கொள்ளலாம். மேலதிக உற்பத்தி நடைபெறாது விவசாயிகளும் உற்பத்திபொருள்களை அதிக விலைக்கு விற்று இலாபம் பெறலாம் எனக் கூறினார். (ம-152)

கமமும் புலமும்

ஜெயஸ்ரீ

# 70 ஆயிரம் தென்னங்கன்றுகள் இந்த வருடத்துக்குள் விநியோகம்

## பத்தமேனி, கிளிநொச்சியில் நாற்றுமேடைகள்

தெங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு இந்த வருட இறுதிக்குள் சுமார் எழுபதாயிரம் தென்னங்கன்றுகள் விநியோகிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை தெங்கு பயிர்ச்செய்கைச் சபை எடுத்துள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தெங்கு பயிர்ச் செய்கைச் சபையின் யாழ். மாவட்ட பிராந்திய முகாமையாளர் சி.சிவச்சந்திரன். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பயனாளிகளுக்கே இந்த 70ஆயிரம் தென்னங்கன்றுகளும் விநியோகிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருநூறு ஏக்கருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் நாநூறு ஏக்கருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருநூறு ஏக்கருக்கும் தேவையான தென்னங்கன்றுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதற்கான தென்னங்கன்றுகளைப பெறுவதற்காக அச்சுவேலி பத்தமேனியில் 50ஆயிரம் விதைத் தேங்காய்கள் கொண்ட நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியிலும் 50ஆயிரம் விதைத் தேங்காய்கள் கொண்ட நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தெங்குப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்காக கடந்த ஏப்ரல் மாதம் மானிய விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கு மட்டுமே இந்தத் தென்னை நாற்றுகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அடையாளப்படுத்தப்பட்ட இடங்களுக்கு ஏற்ற தென்னங்கன்றுகள் மட்டும் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அச்சுவேலி பத்தமேனியில் போடப்பட்டுள்ள நாற்று மேடையினை கடந்த மாதம் யாழ்ப்பாணம் வருகைதந்த தெங்குப் பயிர்ச்செய்கைச் சபைத் தலைவர் லிங்கொன் பெர்னாண்டோ மற்றும் தெங்கு பயிர்ச்செய்கைச் சபையின் உதவி முகாமையாளர் ஐ.ஆர்ராஜபக்ச ஆகியோர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (ம-7)



# "அன்றாடத் தேவைக்கு காய்கறி, நேரமும் பயனுள்ளதாகும்..."

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இருந்தும் நெற்செய்கை, உப உணவு மற்றும் வதிவிட வேளாண்மை (வீட்டுத் தோட்டம்) ஆகியவற்றில் ஈடுபடுகின்ற



விவசாயிகளில் ஆண்டுதோறும் சிறந்த விவசாயிகளைத் தனித்தனியே தெரிவு செய்து அவர்களைக் கௌரவித்து வருகிறது விவசாயத் திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகம். கடந்த நான்கு வருடங்களாக வருடத்தின் சிறந்த விவசாயிகளுக்கு சான்றிதழும் பணப் பரிசிலும் வழங்கப்படுகின்றது.

இந்த ஆண்டும் 12 விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இருந்து தலா மூன்று பேரைத் தெரிவு செய்து அவர்கள் 36 பேரும் கௌரவிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரான நல்லூர் விவசாய போதனாசிரியர் பிரிவைச் சேர்ந்த திருமதி உதயகுமாரி மனோகரனை இன்றைய 'கமமும் புலமும்' பகுதிக்காகச் சென்று சந்தித்தோம்.

வீட்டில் இருக்கின்ற பெண்கள் அன்றாட சமையல் வேலைகள் உட்படத் தமது வீட்டு வேலைகளை முடித்துவிட்டு மிகுதியாக உள்ள நேரத்தில் வதிவிட வேளாண்மையில் (வீட்டுத் தோட்டம்) ஈடுபடுவதன் மூலம் தமது அன்றாட உணவுக்குத் தேவையான காய்கறிகளைப் பெற்றுக்கொள்வதுடன், நேரத்தையும் பயனுள்ளதாகப் போக்கமுடியும் என்றார் திருமதி உதயகுமாரி.

கொழும்புத்துறையைச் சேர்ந்த இவர், தான் குடியிருக்கும் காணியில் சிறிய அளவில் வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டு வருகிறார். நாம் அவரின் வீட்டிற்குச் சென்றபோது எம்மை இன்முகத்துடன் வரவேற்ற அவர் தனது வீட்டுத் தோட்டத்தையும் எமக்குக் காண்பித்தார். அங்கு மிளகாய், கத்தரி, தக்காளி உட்பட பல பயிர்கள் காணப்பட்டன.

அவரது வீட்டுத்தோட்டம் பற்றியும் இந்த ஆண்டின் சிறந்த வதிவிட வேளாண்மை விவசாயியாகத் தெரிவு செய்யப்பட்டமை பற்றியும் நாம் அவரிடம் கேட்டோம். கடந்த வருடமே தான் முதன்முதலில் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டதாகத் தெரிவித்த அவர், அதற்குக் காரணம் அப்பகுதி விவசாய சம்மேளனம்தான் என்றார். விதைகள் மற்றும் மண்வெட்டி, பூவாளி என்பவற்றை சம்மேளனம் வழங்கியதன் மூலம் வீட்டுத்தோட்டச் செய்கையில் தனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியதாகவும் அதனால் அதில் முழுமனதுடன் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு யாழ் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் கூட்டெரு தயாரித்தல் பற்றிய இரண்டு நாள் பயிற்சி தமக்கு வழங்கப்பட்டதுடன், பொலித்தீன் பைகளில் பசளைகலந்த செம்மண்ணும் வழங்கப்பட்டதாகவும் அதுவே தமக்கு நல்லதொரு ஆரம்பமாக இருந்தது எனவும் நினைவுகூர்ந்தார். கொழும்புத்துறையில் உங்கள் காணியில் உள்ள மண்ணும் கிணற்று நீரும் உங்கள் பயிர்ச் செய்கைக்கு ஏற்றதா? என்று நாம் அவரிடம் கேட்டோம்.

ஓரளவு உவர் கலந்த களிமண். கிணற்று நீரும் சற்று உவர்த்தன்மை உடையது என்று கூறினார். ஆனால், பசளைகலந்த செம்மண் இடப்பட்டதால் பயிர்கள் நன்றாக வருவதாகவும் கிணற்று நீரால் எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் கூறிய அவர், சுத்த நீரையே பயிர்களுக்கு விடுவதாகவும் தெரிவித்தார்.

உங்கள் வீட்டுத்தோட்டத்தில் விளையும் காய்கறிகளை விற்பனை செய்து பணம் சம்பாதிக்க முடிகிறதா? என்று நாம் கேட்டோம்.

"அவற்றை நான் என்றுமே விற்பனை செய்ததில்லை. எமது வீட்டுத் தேவைக்கு எடுத்துக்கொண்டு மிகுதியை அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுப்பேன். இதனால், ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதுடன் உறவும் பலப்படும்" என்றார்.



உண்மைதான் உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் கொடுத்து நாமும் உண்பதில் எவ்வளவு சந்தோசம் இருக்கிறது.

இந்தப் பயிர்களில் ஏற்படும் நோய், பீடைத்தாக்கங்களை எவ்வாறு கட்டுப்படுத்துகிறீர்கள்? இரசாயன மருந்துகளை உபயோகிக்கிறீர்களா? என்று எமது சந்தேகத்தை அவரிடம் வெளியிட்டோம். உள்ளிக் கரைசலை மட்டுமே கிருமிநாசினியாகப் பயன்படுத்துகிறேன். அதுபோன்று பசளையாகவும் ஆட்டெரு, மாட்டெரு, கூட்டெரு போன்றவற்றையே பயன்படுத்துகிறேன். இரசாயனப் பசளைகளையோ, மருந்துகளையோ நான் பாவிப்பதில்லை என்று கூறி எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

உங்கள் கணவர் மற்றும் பிள்ளைகள் உங்களுக்கு உதவி செய்து தருவார்களா? இது நாம்.

கணவர் வேலைக்குப் போய்விட்டு வந்து தன்னாலான உதவிகளைச் செய்து தருவார். எமக்கு 5 பிள்ளைகள். அவர்களும் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் உதவிசெய்து தருவார்கள் - என்றார்.

நல்லூர் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் வதிவிட வேளாண்மையில் (வீட்டுத்தோட்டம்) சிறந்த விவசாயியாக இந்த ஆண்டு நீங்கள் தெரிவு செய்யப்படுவீர்கள் என்று நினைத்திருந்தீர்களா? என்று கேட்டோம்.

சற்றும் எதிர்பார்க்கவில்லை. எனது வீட்டுத் தோட்டத்தை உரிய அதிகாரிகள் வந்து பார்வையிட்டுச் சென்றார்கள். ஆனால், சிறந்த விவசாயியாக என்னைத் தெரிவு செய்வார்கள் என்று நான் எண்ணவில்லை. பின்னர் நான் தெரிவு செய்யப்பட்டிருப்பது பற்றிய உத்தியோகபூர்வமான கடிதம் கிடைத்ததும்தான் அதுபற்றி அறிந்து கொண்டேன்.

அப்பொழுது உங்கள் மனோநிலை எப்படி இருந்தது?

மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஒரு பெண்ணாக இருந்துகொண்டு நான் செய்த வதிவிட வேளாண்மைக்காக சிறந்த விவசாயியாகத் தெரிவுசெய்யப்பட்டமை மகிழ்ச்சியான விடயம் தானே? அதற்காக எனக்குச் சான்றிதழும் 650 ரூபாவுக்கான காசோலையும் வழங்கப்பட்டது; பெரியதொரு கௌரவமும் கிடைத்தது.

அவருக்குக் கிடைத்த அந்தக் கௌரவத்துக்கு நாமும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துவிட்டு, அவரிடம் இருந்து விடைபெற்றோம்.

வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் நாம் பலவிதமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. கிழங்குப்பயிர், மரக்கறிப்பயிர், இலைக்கறிப்பயிர், பழப்பயிர் என்று

சந்திப்பு: வைஷாலி.

பலவகையான பயிர்களையும் செய்கை பண்ணுவதன் மூலம் சமச்சீர் உணவு எமக்குக் கிடைக்கின்றது. பயிர்களின் கழிவுகள் வீட்டில் உள்ள ஆடு, மாடுகளுக்கு உணவாக அமைகின்றன. அத்துடன் வீட்டுக் காணியில் கிடைக்கின்ற குப்பை கூளங்கள் மற்றும் சமையலறைக் கழிவுகள் என்பவற்றை பயிர்களுக்குப் பசளையாகவும் இடமுடியும். இதனால், பணவிரயம் கட்டுப்படுத்தப்படுகிறது. குறைந்த பணத்துடன் நிறைந்த தரமான உணவைப் பெறுவதற்கு வீட்டுத்தோட்டம் பெரிதும் உதவுவதால் வீட்டுத் தோட்டம் செய்தல் நல்லதொரு செயற்பாடாகும்.



AMPL
Quality Assurance
தரம் மிகு சமையற்கலையின் வடிவம்
ஒவ்வொருவருக்கும் சுவையான சமையலை அருந்த ஆசை. ஆனால் சுவையான சமையலை சமைக்க ஏன் தயக்கம். சுவையான சமையலை நீங்களும் சமைக்க, கையாள்வதற்கு இலகுவானதும் பாதுகாப்பானதும், இத்தாலியின் வடிவங்களையும் தொழில்நுட்பங்களையும் ஒருங்கே கொண்ட பிறஷர் குக்கர், பிளென்டர், ஃபூட் புரொஸசர், நொன் ஸ்டிக் பாத்திரங்கள் மற்றும் காஸ் குக்கர்கள் என்பனவற்றை காஞ்சன் உங்களுக்கு வழங்குகின்றது.
KANCHAN
ஒரு தரமான சமையல் அனுபவம்.
pressure coo gas cookers, asters, food processors, water filters
இலங்கைக்கான ஏக முகவர்கள்:
ஏசியன் மார்கட்டிங் பிறைவேட் லிமிட்டட்.
12, ஹல்ஸ்டொப் வீதி, கொழும்பு 12. தொலைபேசி: 2448226, 074-712557.
கிளை: 129, டாம் வீதி. தொலைபேசி: 2473358
நாடுமுழுவதும் உள்ள விநியோகத்தர்களிடமும் மற்றும் ஆர்பிகோ காட்சியறைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



படையினர் சேகரித்த உலர் உணவு பொருள்களை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அருட் தந்தையும் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

# குடியிருப்புப் பகுதியில் தேங்கிய வெள்ளநீரை அகற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.18

சாவகச்சேரி கச்சாய் வீதியில் நகரசபை ஊழியர்களின் குடியிருப்புகளுக்குள் மழை நீர் தேங்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக பலாலியில் உள்ள படைத்தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

பாதுகாப்பு வலயப்பகுதி ஊடாக வெள்ளம் வழிந்தோடுவது தடைப்பட்டிருந்ததால் அங்கு வசிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

521ஆவது படையணி தலைமையகத்தின் வழிகாட்டலின் கீழ், படையினர் சிரமதானப் பணி மூலம் அங்கு பல வேலைத்திட்டங்களை நிறைவு செய்துள்ளனர் என்று படைத்தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1. சாவகச்சேரி - கச்சாய் வீதியில தற்காலிகமாக வசிக்கும் சாவகச்சேரி நகரசபை ஊழியர்களின் குடியிருப்புகளுக்குள் மழைநீர் புகுந்துள்ளதுடன், நீர் தேங்கி நின்றதால் அவர்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்ள அமைக்கப்பட்டிருந்த கிணறுகளிலும் மழைநீர் நிரம்பிக் காணப்பட்டது. மலசலகூடமும் பயன்படுத்த முடியாத நிலையில் மக்கள் பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுத்தமையினால் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு உடனடியாக உயர்பாதுகாப்பு வலயப் பகுதியின் ஊடாக வாய்க்கால்கள் வெட்டி நீரை வழிந்தோட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கை கடந்த 13ஆம் திகதி 521 ஆவது படையணி தலைமையகத்தின் வழி காட்டலுக்கமைய மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பணிகள் அன்றையதினம் காலை 8.00மணிக்கு ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பணிகளுக்கு தற்காலிக குடியிருப்புகளில் வசிக்கும் சகல மக்களினதும் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றதோடு, இந்தப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு காலை தேநீர் மற்றும் மதியஉணவு உட்பட மாலையும் தேநீர் போன்றவைகளைப் பாதுகாப்புப் படையினர் பெற்றுக்கொடுத்துள்ளனர். நீரை அப்புறப்படுத்துவதற்கு பாதுகாப்பு வலயப் பகுதியில் வாய்க்கால்களை பாதுகாப்புப் படையணியினரே வெட்டி நீரை வழிந்தோடச் செய்துள்ளனர். மேலும் இப்பகுதியில் மழைநீர் நிறைந்து தேங்கியிருப்பதை தடுப்பதற்கும் இவ்வாறு தேங்கிநிற்கும் நீர் வீடுகளுக்குள் புகுவதைத் தவிர்ப்பதற்கும் நகரசபை செயலாளர் வழங்கிய உழவு இயந்திரத்தின் மூலம் பாதுகாப்பு வீரர்கள் 10லோட் (சுமை) மணலை ஏற்றிக்கொண்டு வந்து கொடுத்துள்ளனர்.

மேலும் 521 ஆவது படையணியின் கட்டளைக்கு கீழ் இயங்கும் படைப் பிரிவினால் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப்பொருள்கள் கடந்த 14ஆம் திகதி வெள்ளத்தினால் பாதிகப்பட்டு தற்காலிக குடியிருப்புகளில வசிக்கும் 45குடும்பத்தினருக்கும் மேலும் அப்பகுதியில் வசிக்கும் 85 வறிய குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன. மேலும் 52ஆவது படையணியின தளபதியின் கட்டளைக்கு அமைய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைக்காக 3மலசலகூடங்கள் அமைத்துக் கொள்வதற்குத் தேவையான பொருள்களும் வழங்கப்பட்டன.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காட்டு யானை தாக்கி 4 வயதுச் சிறுமி பலி!

நான்கு வயதுச் சிறுமியை யானை மிதித்துக்கொன்ற சம்பவம் புத்தளத்தில் நடந்தது. இச்சம்பவத்தில் பலியான சிறுமியின் தந்தை, யானையின தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 15 ஆம் திகதி புத்தளம் ஆனமடுவ தொகுதியில் நவத்தேகம என்ற இடத்தில் நடந்தது.

சம்பவ தினத்தன்று இரவு 10 மணியளவில் தொலைக்காட்சி பார்த்துவிட்டு வந்தபோதே இவர்களை யானை தாக்கியது.

துஷார கீர்த்தி (வயது 28) என்பவரும் அவரது மகள் சந்தூரி கீதாஞ்சலி (வயது 4) என்னும் சிறுமியுமே தாக்குதலுக்கு இலக்காகினர்.

கீதாஞ்சலியை யானை காலால் மிதித்துக் கொன்றது. துஷார கீர்த்தியை யானை கடுமையாகத் தாக்கியது. இதனால், அவரது மார்பு எலும்புகள் முறிந்தன. புத்தளம் தள வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

நவத்தேகம வைத்தியசாலைக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது. யானையின் வெறிச் செயலையடுத்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ம)

## தபாலக ஆலோசனை குழுக் கூட்டம்

குருநகர்,நவ.18

யாழ். பிரதம தபாலக ஆலோசனைக் குழுவின் கூட்டம் நாளை புதன் கிழமை பி.ப. 4மணிக்கு யாழ். பிரதம தபாலகத்தில் நடைபெறும்.

ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறும் ஆலோசனைக் குழுவின் இணைச் செயலாளர் சி.பூ. இராசதுரை கேட்டுள்ளார். (எ-51)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,நவ.18

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பெரியபுராணம் எனும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை பேரவை உறுப்பினர் பண்டிதர் கருத்துவேலு நிகழ்த்துவார். (எ-173)

# நாடாளுமன்றில் தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகா விளக்கவேண்டும்

## அமைச்சர் ராஜித கோருகிறார்

கொழும்பு,நவ.18

நாடாளுமன்றம் கூட்டப்படும்போது ஜனாதிபதி சந்திரிகா தனது நிலைப்பாட்டை தெளிவாக விளக்கவேண்டும் என்று காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றதன் நோக்கத்தை அவர் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன், தனது அடுத்த கட்ட நடவடிக்கையாக அவர் என்ன செய்யப்போகிறார்? தேசிய அரசு ஒன்றை நிறுவப்போகிறாரா? அல்லது ஜே.வி.பியுடன் கூட்டுச்சேரப் போகிறாரா? என்பதை நாடாளுமன்றில் விளக்க வேண்டும்.

அப்போதுதான் ஜனாதிபதியின் உண்மை நிலைப்பாடு தெரியவரும் அவரது விளக்கங்களும், எதிர்கால நடவடிக்கைகளும் என்ன என்பதைப் பொறுத்தே அரசின் நடவடிக்கையும் அமையும் - என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# ஜனநாயக விரோத நடவடிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா கைவிட வேண்டும்

## கல்வி அமைச்சர் கருணாசேன தெரிவிப்பு

கொழும்பு,நவ.18

"தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை ஏற்படுத்த முன்னர், ஜனநாயக விரோத நடவடிக்கைகளைக் கைவிட்டு சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை ஜனாதிபதி ஏற்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் கருணாசேன கொடித்துவக்கு.

அத்துருகிரிய ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து விளக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தீர்மானங்களை ஜனாதிபதி ஏற்க மறுத்தார். முப்படை தளபதிகளுக்கும் இது குறித்து உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

ஆனால், தற்போது கண்காணிப்புக் குழுவின் தீர்மானங்களை ஏற்றுச் செயற்படுமாறு முப்படைத் தளபதிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஜனாதிபதி செயற்படுவதால் நாட்டில் ஸ்திரமற்ற நிலை தோன்றியுள்ளது. நாடு பொருளாதாரத்தில் படுபாதாளத்திற்கு சாய்ந்துள்ளது - என்று அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தார். (ம)

# அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தால் கல்வி நடவடிக்கைகள் சிறப்பாக அமையும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

கோப்பாய்,நவ.18

வசதிகள் குறைந்த பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்படுவதன் மூலமே மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக அமையும். அத்துடன் அவர்களின் கற்றல் நாட்டமும் அதிகரிக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த பரிசில் நிகழ்வும், பௌதிக வளங்களின் திறப்பு விழாவும் அதிபர் சி.மகேஸ்வரதாசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-



எமது மாணவர் சமூகம் தொடர் யுத்த அனர்த்தங்களிற்கு முகம் கொடுத்தமையினால் அவர்களினால் பூரணவளம் உள்ள கல்வியைப் பெற முடியவில்லை.

மேலும், கிராமப்புற பாடசாலைகளில் பெரும்பாலும் வசதி குறைந்த மாணவர்களே கல்வி கற்கிறார்கள். எனவே, அவர்களிடமிருந்து பௌதிக வளங்களுக்கான உதவியை எதிர்பார்க்க முடியாது. இவற்றை பொது நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகள் இனங்கண்டு தேவையான உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும் - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் போரவீந்திரன் தமது உரையில்,

சமூகத்தின் பங்களிப்பானது ஒரு பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் முதற்படி ஆகும். எனவே பாடசாலையும், சமூகமும் ஓர் இணைபிரியா அங்கங்கள். ஆனால், சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பாடசாலைக்குப் போய் வந்தால் காணும் என்ற மனநிலையில் உள்ளனர். பிள்ளைகளின் செயற்பாடுகளில் கவனமெடுப்பது மிகவும் குறைவு. இது தவிர்க்கப்பட வேண்டியதாகும் - என்றார்.

தொடர்ந்து பழைய மாணவர் இ.சிவசேகரத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்ட தண்ணீர்த் தாங்கி அவரது பெற்றோரினாலும், பழைய மாணவர் இ.கருணாமூர்த்தியினால் அன்பளிப்பாகச் செய்து கொடுக்கப்பட்ட மின் இணைப்பு அவரது பெற்றோரினாலும், சி.மனோராஜ், மு.க.கருணாகரன் ஆகியோரால் அன்பளிப்பு செய்யப்பட்ட கணனிக்கூடம் யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் போ.ரவீந்திரனாலும், சிறுவர் பூங்கா அதற்கான நிதி ஒதுக்கீட்டை வழங்கியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தாலும் திறந்து வைக்கப்பட்டன.

# குரங்குபாஞ்சான் முகாமை அகற்றியிருந்தால் யுத்தம் வெடித்திருக்கும் என்கிறார் மாரப்பன

ஜனாதிபதி சந்திரிகா கூறியது போன்று குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற இராணுவத்தைப் பயன்படுத்தியிருந்தால், மீண்டும் யுத்தம் வெடித்திருக்கும்.



- இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

பலாங்கொடையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமை பத்து நாள்களுக்குள் அகற்றுமாறு ஜனாதிபதி சந்திரிகா கூறியிருந்தார். அவரின் இந்தக் கூற்றுக்குக் கட்டுப்பட்டு அந்த முகாமை அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் மீண்டும் யுத்தம் வெடித்திருக்கும்.

இந்நிலையில், பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றார். அமைச்சை பொறுப்பேற்று பத்து நாள்கள் கடந்துவிட்ட நிலையில், குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக ஜனாதிபதி இன்னமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த முகாமை அகற்றினால் மீண்டும் யுத்தம் வெடிக்கும் என்று ஜனாதிபதி இப்போது உணர்ந்துள்ளார். அதனால்தான் அந்த முகாமை அகற்ற அவர் அஞ்சுகிறார்.

அந்த வகையில் பார்க்கும் போது, பாதுகாப்பு அமைச்சராக நான் இருந்தபோது செயற்பட்ட விதம் சரியானது தான்.

தற்போது நாட்டில் அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளது. ஆறு வருடங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை நடத்த மக்களின் ஆணை பிரதமர் ரணில் தலைமையிலான அரசுக்குக் கிடைத்தது. எனவே, தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்க எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரதமர் ரணில் தலைமையிலான அரசு தயாராக உள்ளது.

- இப்படி கூறினார்.

# மீண்டும் யுத்தம் ஏற்படுமென மக்கள் அச்சத்தில் உள்ளனர்

## புளொட் தலைவர் சித்தார்த்தன் உரை

கொழும்பு,நவ.18

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை காரணமாக மீண்டும் யுத்தம் ஏற்படுமா என்ற அச்சம் சகல மக்களையும் ஆட்படுத்தியுள்ளதாக புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணி, செத்சிறிபாயவில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:-

தற்போதைய நிலையை உணர்ந்து இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சகல பேதங்களையும் மறந்து ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டும். மேலும், சகல இனத்தவர்களும் சமாதானப் பாதையில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனவும் -

குறிப்பாக, மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். அரசியல் தீர்வின்றி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது - என்றார்.

தற்போதைய நெருக்கடி அரசியல் நிலை காரணமாக விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் குறித்து கவனம் செலுத்தப்படுமா என்று சந்தேகம் எழுந்துள்ளதாக இக் கருத்தரங்கில் கலந்துகொண்ட புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

ஏழு விடயங்கள் அடங்கிய யோசனை ஒன்றை இந்த அமைப்பு அங்கு வெளியிட்டது. (ம)

# வியாபாரி வேடத்தில் சென்று வீடுகளில் பொருள், பணம் சூறை!

யாழ்ப்பாணம்,நவ.18

பொருள்களை விற்பதாகக் கூறி வீடு, வீடாகச் செல்லும் சிலர், வீடுகளில உள்ள பொருள்கள் மற்றும் பணத்தை சூறையாடிக்கொண்டு மாயமாவதாகக கூறப்படுகிறது.

அண்மைக் காலமாக யாழ். நகரப் பகுதியில் வீடு, வீடாகச் சென்று பொருள களை விற்பனை செய்வோர் அதிகரித துள்ளனர். ஆனால், இவர்களில் சிலர் வீடுகளிலுள்ளோர் கவனிக்காத தரு ணம் பார்த்து அங்குள்ள பொருள் கள் மற்றும் பணம் என்பவற்றைத் திருடிச் செல்கின்றனராம்.

இது போன்ற சம்பவம் ஒன்று அண்மையில் நுணாவில் மேற்கிலும் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின் னர் தென்பகுதி மற்றும் தமிழ்நாட்டி லிருந்தும் யாழ்ப்பாணத் துக்கு வருகை தந்துள்ளதாகக் கூறிக்கொண்டு பலர் வீடு வீடாகச் சென்று வியாபார நட வடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 |  | 19 |
| - | | - |
| 10 | | 10 |
| - | | - |
| 1932 | | 2003 |

### திருமதி கிட்டிணர் அசுபதி

**அன்பாய் பண்பாய் அகிலத்தில் வாழ்ந்திர ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்**

இன்று (18.11.2003) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத் திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இலந்தைக்காடு,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (24822) (12-18-32) **-குடும்பத்தினர்.**

## சான்றிதழ் வழங்கலும் கருத்தரங்கும்



"POSH" அழகுக்கலை நிறுவனத்தினரால் **N.I.I.T** கீழ்த்தளத்தில் நடைபெற்ற 'அழகுக்கலை' பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு அதில் தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் சிறப்புச் செயன்முறைக் கருத் தரங்கும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

**திகதி:** 22-11-2003 சனிக்கிழமை
**இடம்:** இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி
**நேரம்:** காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை

### கருத்தரங்கில் ஆராய இருக்கும் விடயம்

I உங்கள் சருமத்தின் தன்மையை அறிய வேண்டுமா?
II சருமத்தில் ஏற்படும் பருக்கள், வடுக்கள், வயதுக்கு முந்திய முதிர்ச்சி போன்ற பிரச்சினைகளா?
III பொடுகு, இளநரை முடி உதிர்தல் போன்ற பிரச்சினைகளா?
IV கழுத்தில் கரு வளையமா?

இவற்றுக்கான தீர்வு விளக்கங்களுடன் இன்னும் பல விடயங்களும் நவீன முறையிலமைந்த இருவகையான Facial உம் கற்பிக்கப்படும்

கருத்தரங்கில் பங்குபற்றுபவர்களுக்கும் சான்றிதழ் வழங் கப்படும். உங்கள் பதிவுகளை ரூ. 200 கட்டணம் செலுத்தி 21.11.2003ஆம் திகதிக்கு முன்பு *இல. 12, சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணம்* என்ற விலாசத்தில் பதிவுசெய்துகொள்ளவும். மேலதிக விவரங்களை 0777-6167729, 222-236030 ஆகிய தொலைபேசி எண்களுடன் தொடர்புகொண்டோ அல்லது உதயன் பணிமனையிலோ பெற்றுக்கொள்ளலாம்.

**- நிறுவனத்தினர்.**

(சி-31349) (30-14-26-25)

## வெள்ளப்பாதிப்பு!

தென்மராட்சி பிரதேசத்தில் பெய்து வரும் அடைமழையினால் பிரதேசத்தின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் நிரம பியுள்ளன. நெற்செய்கைபண்ணப்பட்ட வயல்களில் வெள்ளம் அதிகரித்து வரு வதால் பயிர்கள் அழியும் அபாயம் காணப்படுவதாக நெற்செய்கையாளா கள் தெரிவித்தனர். (ஓ-117)

## தாதியர்களுக்கு சம்பள நிலுவை

யாழ்ப்பாணம்,நவ.18

'கோதாகொட்' சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைக்கிணங்க தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் இடை நிலை உத்தியோகத்தர்களுக்கு சம் பள நிலுவைக் கொடுப்பனவு நேற்று முதல் யாழ். போதனா வைத்திய சாலையினால் வழங்கப்பட்டு வருகி றது.

நிதி நெருக்கடி காரணமாகத் தற் பொழுது தலா 10 ஆயிரம் ரூபா வீதம வழங்கப்பட்டு வருகிறது என்றும் - மிகுதிக் கொடுப்பனவு படிப்படியாக வழங்கப்படும் எனவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பணியில் இருந்து ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் இடைநிலை உத்தியோகத்தர்கள் தமக் குரிய நிலுவைக் கொடுப்பனவை பெற் றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (ம-10-15)

## கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவிருந்த அதி பர்களுக்கான கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறுமென நல் லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். (ம-8)

## இன்று மணல் விநியோகம்

வடமராட்சி,நவ.18

வடமராட்சி கிழக்கு குடத்தனை, மணல்காட்டுப் பகுதி மணல் இன்று திங்கட்கிழமை அரச, அரசசார்பற்ற நிறு வனங்களின் ஒப்பந்த கட்டுமான வேலை களுக்காக விநியோகிக்கப்படும் என வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புன ரமைப்பு நிறுவனம் அறிவித்துள்ளது. (எ-173)

## செஞ்சிலுவைக் குழு தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.18

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வினர் பின்வருவோரை யாழ். கோவில வீதியில் அமைந்துள்ள காரியாலயத் துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித் துள்ளனர்.

திருமதி லோறன்ஸ் கிறிஸ்ரீன் (மன்னார்), திருமதி பி.செல்வமணி (கட் டைக்காடு), திருமதி தங்கவேல் காளி யம்மா (கட்டைக்காடு), திருமதி எஸ்சுந் தராம்பாள் (செம்பியன்பற்று), திரு மதி நாகராஜா பூங்கோதை (செம்பி யன்பற்று), திருமதி முத்துசாமி மனோன்மணி (தாளையடி), திருமதி எஸ்.நாகேஸ்வரி (முல்லைத்தீவு).

## தேவை

**பாட்ஸ் விற்பனையில் முன் அனுபவமுள்ளவர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.**

வளர்மதி உதிரிகள் வாணிபம்,
இல.19 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(24814)(32-12-18)

## சகலபீட மாணவர்களுக்குமான அறிவித்தல்

**Dialog G.S.M.** சேவையினைப் பெறுவதற்காகப் பதிவுசெய்து கொண்ட சகல மாணவர்களையும் இன்று (18.11.2003) செவ்வாய்க்கிழமை முதல் தங்களுடைய கையடக்கத் தொலைபேசியுடன் வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(24821)(34-14-26-25)

## கண்ணீர் அஞ்சலி

எமது இசைத்துறை விரிவுரையாளர் **திரு.ஸ்ரீ.தர்சனன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### ஸ்ரீரங்கநாதன் (பொறியியலாளர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இசைத்துறை விரிவுரையாளர்கள்,
ஊழியர்கள்.
யாழ். பல்கலைக்கழகம்.

(24813) (25-14-26)

## பதினாறாம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 13 |  | 03 |
| - | | - |
| 09 | | 11 |
| - | | - |
| 1928 | | 2003 |

### திருமதி சிவபாக்கியம் குட்டிப்பிள்ளை

மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்று
பதினாறு நாள்கள் ஆனாலும் நம் இரு
விழிகள் சிந்திய கண்ணீர் இன்னமும்
காயவில்லையே தாயே... எம் அன்னையே!
பொன்போல் எம்மை அன்புடன் அரவணைத்து
நின்ற தாயே... உன்னை பொல்லாத நோய்வந்து
நீ சொல்லாமல் போன தேன் தாயே...?
பத்து மாதம் தவமிருந்து பெற்ற உன்
முத்துக்களைப் பாதியிலே தவிக்க விட்டதேன் அம்மா?
தாயே உங்கள் அன்புமுகம் என்றும் மறையாது
உங்கள் கனவுகள் என்றும் நனவாகும்...
உங்கள் அன்பு வேண்டி நிற்கின்றோம் அம்மா

புனித வில்லூன்றி தீர்த்தக் கரையில் நேற்று நடைபெற்ற அந்தியேட்டியல் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றி களைத் தெரிவிக்கின்றோம்.

இன்று(18.11.2003) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில நிகழ் கின்ற வீட்டுக் கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்பே வடிவான எமது அன்னையின் பிரிவுத்துயரால்*

*திரு. கு. அரசேஸ்வரன் (ஆசிரியர்)*
*கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு.*
*யாழ்ப்பாணம்* (24809)(35-14-26-25)

வாடும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்கள்

நெடுந்தீவு

### வேலுப்பிள்ளை பொன்னையா (மலையாஸ்குளம்)

நெடுந்தீவு மேற்கு, மலையாஸ்குளம் வேலுப்பிள்ளை பொன்னையா அவர்கள் நேற்று (17.11.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சீதேவிப்பிள்ளை ஆகியோரின் மகனும் தையலம்மை, காலஞ்சென்றவர்களான குட்டிப் பிள்ளை, தங்கம்மா, கந்தையா, காமாட்சி ஆகியோரின் சகோதரனும் பால சுந்தரம், முத்துக்குமாரு, ஜெயமணிபூரணம், மாசிலாமணி (ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்) ஆகியோரின் மைத்துனரும் இராசலிங்கம், தன லட்சுமி (பிரான்ஸ்), நவரெட்ணராசா, சிவசோதி, தர்மரெட்ணம் (லண்டன்), குண ரத்தினம் ஆகியோரின்மாமனாரும் ஜெகதாஸ்,ஜெகதாரணி,நவதர்சன் ஆகியோரின் பெரியதகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2003) செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு மேற்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*நெடுந்தீவு மேற்கு,*
*நெடுந்தீவு I.* (24824)(33-12-18-32)

தகவல்: மு.குணரத்தினம் (மருமகன்)

### செல்லத்துரை செல்வராஜா

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாக வும் கொண்ட செல்லத்துரை செல்வராஜா 15.11.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத் துரை மற்றும் இராசம்மா (சுவிஸ்) தம்பதிகளின் அன்பு மகனும் இரா சையா - இராசு தம்பதிகளின் அன்பு மருமகனும் பிரபா (பிரான்ஸ்), செல்வி (கனடா), பிரிசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சதீஸ் (பிரான்ஸ்), முரளிதரன் (கனடா), சதீஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரணி, பிரவின், கிசோர், நிவ்வியா, சுருதி ஆகியோரின் அன்புப் பேரனும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி (கனடா), விக்னேஸ்வரி, திலகேஸ்வரி, தவராஜா (சுவிஸ்), பத்மராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகலிங்கம், துரை ராஜா, இரட்ணகுபேரன் (கனடா), விசாகரட்ணம், துரையப்பா, யாழினி (சுவிஸ்), அமுதா (சுவிஸ்), பரமேஸ்வரி, கமலேஸ்வரி, பாலகிருஸ்ணன், சிவேஸ்வரி, விமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-11-2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (24827)(11-18-32)

தகவல்: மனைவி, பிள்ளைகள்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வ.பி.போ.சபை சிரேஷ்ட சாலைப் பரிசோதகரும், விபத்து உத்தியோகத்தரும், தேசிய ஊழியர்சங்க நிர்வாக சபை உறுப்பினரும், சாலை ஊழியர்நலன்புரிச் சங்க பொருளாளரும், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்க உபசெயலாளரும், கிராம அபிவிருத்திச் சங்க செயலாளரும், சுடர்ஒளி சனசமூக நிலையம், சுடர்ஒளி பாலர் பாடசாலை ஆகியவற்றின் செயலாளரும், சிறந்த சமூகசேவையாளருமாகிய

**திரு. மார்க்கண்டு மகேந்திரன்**

அவர்களையும்



காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட வ.பி.போ.சபை சிரேஷ்ட சாலைப் பரிசோதகரும், தேசிய ஊழியர்சங்க நிர்வாக சபை உறுப்பினரும், சிவகௌரி சனசமூக நிலைய முன்னாள தலைவரும், சிறந்த சமூகசேவையாளருமாகிய

**திரு. செல்வரத்தினம் செல்வராசா**

அவர்களையும்

அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு நாம் மகிழ்ச்சியோடு பாராட்டி வாழ்த்துகிறோம்.

**- சக ஊழியர்கள், நண்பர்கள்.**

(24802)(34-14-25-26)

# புத்தளம் அன்ட்றூஸ் மாணவர்கள் அதிபருக்கு எதிராகப் போராட்டம்

புத்தளம்,நவ.18

புத்தளம் புனித அன்ட்றூஸ் மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். இதனால், கல்லூரியின் வழமையான அலுவல்கள் பாதிப்படைந்தன.

கல்லூரியின் அதிபரான ஹியூபட் அப்புஹாமியை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு கோரியே இப்போராட்டம் இடம்பெற்றது.

மாணவர்களுக்கு ஆதரவான பெரும்பாலான பெற்றோர்கள் பாடசாலை அருகே குழுமிநின்றனர்.

எனினும், ஒரு பிரிவு மாணவர்களும் பெற்றோர்களும் அதிபரை இடமாற்றம் செய்யக்கூடாது என்று வாதிட்டதால் இரு குழுவினருக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டது.

மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவி, நகரசபை உறுப்பினர் என்.எம். நஸ்மி ஆகியோர் இரு பிரிவினருக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்த முயன்றனர்.

வடமேல் மாகாணசபை முதல்வரின் பரிசீலனைக்காக இப்பிரச்சினை விடப்பட்டுள்ளது.

# சட்டவிரோத பாகிஸ்தானியரை திருப்பியனுப்பும் முயற்சி தோல்வி!

சட்டவிரோதமாக இலங்கைக்குள் வந்த பாகிஸ்தானியர்களை 'கல்ப்' விமான சேவையினூடாக பாகிஸ்தானுக்கு அனுப்ப நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது.

இத்தாலி செல்வதற்காக இவர்கள் இலங்கைக்கு சட்டவிரோதமாக வந்திருந்தபோது கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்த 102 பாகிஸ்தானியர்களை நேற்று தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இவர்களை திருப்பி அனுப்புவதற்கு சர்வதேச வழிமுறைகள் கையாளப்படாததனாலேயே இந்த முயற்சி தோல்வி அடைந்தது எனத் தெரிவிககப்பட்டது. ஒவ்வொரு குற்றவாளிக்கும் இரண்டு பொலஸார் வீதம் பாதுகாப்பு வழங்கப்படுவதோடு கையில் விலங்கிடப்பட வேண்டும் என்ற சர்வதேச விதிமுறையை அதிகாரிகள் பின பற்றவில்லை என்று விமானநிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.


## லஷ்சுமி சினிமா இணுவில்



விஜய், சிறாயன் வடிவேல் (இரு வேடம்), அசின்வர்ந்ராத்தி, மோனிகா இன்னும் பலர் நடிப்பில்

பகவதி

10.30, 2.30, 6.30. (பு.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்

4ஆவது வெற்றி வாரம்
இளைய தளபதி
விஜய், ஜோதிகா,
கிரண், விவேக்
நடித்த
தினசரி காட்சிகள்
11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/31060)(12)





## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 23 06 1920



இறப்பு 23 10 2003

### திருமதி பொன்னம்பலம்இராசம்மா

(புளியங்கூடல்)

எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி நிகழ்வுகள் யாவும் நாளை (19.11.2003) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் சாட்டி புண்ணிய தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் யாவும் 21.11.2003 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

ஆகவே, இந்நிகழ்வுகளில் கலந்து அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

375/15,நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (C/31354) (33-16-18) -குடும்பத்தினர்.

# மின்வழங்க நடவடிக்கை

கொடிகாமம்,நவ.18

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் அம்மன் கோவில் வரையான பகுதிக்கு ஒரு வாரகாலத்தில் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும் என மின்சாரசபை அதிகாரி எஸ்.சடாச்சரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் இருந்து கச்சாய் வீதியின் தம்பு தோட்டம் வரை ஏற்கனவே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் -

கச்சாய் அம்மன் கோயில் வரையான பகுதிக்கும் அல்லாரை அருகம்புல மின் வீதிக்கும் ஒரு வாரத்தில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

என்றும் அவர் தெரிவித்தார.

(ஓ-74)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, நவ.18

எல்லைப்படை மாவீரர்கள் நினைவாக தமிழீழ விளையாட்டுத் துறையினரால் யாழ்.மாவட்ட உதைபந்தாட்டக் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ அராலி பாரதி வி.க. எதிர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.க.

★ கந்தரோடை ஸ்கந்தா ஸ்ரார் வி.க. எதிர் யாழ்ப்பாணம் கலைவாணி வி.க. (ஓ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.18

யாழ். வைஎம்.சி.ஏ. விளையாட்டு அவையினால் நடத்தப்படும் உள்ளரங்கவிளையாட்டுப் போட்டியின் மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணி முதல் வைஎம்.சி.ஏ. மேசைப்பந்தாட்டத்திடலில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில் 10வயது, 12வயது மற்றும் 16வயது பிரிவினர்களுக்கான ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.


## லிபேட்டி அச்சுவேலி

சத்யராஜ், விஜயலட்சுமி, சந்திரசேகர் நடித்த

ராமச்சந்திரா

காட்சி நேரம்: 2.00, 7.00.
நாளை முதல் சரத்குமார் நடித்த
ஒருவன்

## ராஜா யாழ்ப்பாணம்

விக்ரம், சூர்யா, லைலா, சிம்ரன் நடித்த

பிதாமகன் (கடைசிவாரம்)



10.30, 2.30, 6.30 (பு.நே.)
இரவு 9.30 இற்கு
AMERICAN BEAUTY

## நிறைஞ்சனாலய

இன்று மட்டும்
தீவானி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
நாளை முதல் ராஜேஸ், ஸ்ருதிகா நடித்த
அல்பம்
(C/31105)


# பெறுபேறுகளின் மூலப் பிரதிகள் பெற இசுறுபாயவில் விசேட ஏற்பாடுகள்

மண்டைதீவு,நவ.18

பத்தரமுல்லவில் உள்ள இசுறுபாயவில் இயங்கும் பரீட்சைத் திணைக்களத்தில் ஜீ.சி.ஈ சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் மூலப் பிரதிகளை பெறுவதற்கு விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் மூலப்பிரதிகள் கோருவோர் எண்ணிக்கை இருப்பதால் மூலப்பிரதிகளுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் அதனால் இந்த விஷேடப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இசுறுபாயில் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை மூலப்பிரதிகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் அதற்கென தனியாக அமைக்கப்பட்டுள்ள விஷேடக்குழு மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (ம-88)

## சிற்றூழியர் தேவை

உதயன் பணிமனையில் இரவு/பகல் கடமைபுரியக்கூடிய சிற்றூழியர்கள் தேவை. இன்று செவ்வாய்க்கிழமை (18-11-2003) பிற்பகல் 2.00மணிக்கு பணிமனைக்கு நேரில் வரவும்.

★ பாடசாலையில் இருந்து விலகியோர் மற்றும் இடைவிலகியோருக்கு தெரிவில் முன்னுரிமை அளிக்கப்படும்.

*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மனிதவள சேவைப்பிரிவு,
உதயன் பணிமனை.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி சுமாலினி கஜபாலன் அவர்களின் அன்புத் தந்தையார்

### தியாகராஜா சிவசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது பாடசாலை சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
ஊழியர்கள்.
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

(27825) (33-16-18)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 25 04 1949



மறைவு 05 10 2003

அமரர்

### கதிரவேலு திலகராசா

அன்புடனும் பண்புடனும் ஆகரவாய் இருந்தீர்
இன்றோடு நாற்பத்தைந்து நாளும் ஆயிற்றோ!
நீர் மறைந்து போனாலும் நினைவு மறக்காது
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (18.11.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

36/12,காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (24831) (33-16-18)

அன்பு மனைவி,தாய்,மகன்,
சகோதரர்கள்,மருமக்கள்,
உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கிட்ணசாமி தியாகராசா

கெருடாவில், தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் வேரக்கேணி கந்தசுவாமி கோவிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கிட்ணசாமி தியாகராசா அவர்கள் நேற்று (17.11.2003) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பவளம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் பாலச்சந்திரன், ஞானச்சந்திரன், கதிர்காமச்சந்திரன், பவளராணி, கமலராணி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் வசந்தா, பவளம்மா, பதுமநாதன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.11.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு மட்டுவில் சிவன் கோவிலடிக்கு (மட்டுவில் மத்தி) அருகேயுள்ள இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மட்டுவில். (C/31353) (33-16-18) வவா ஜென்ஸி

### சரவணமுத்து அரசபிள்ளை

(ஆயுர்வேத வைத்தியர், யாழ். மாநகரசபை ஆயுர்வேத வைத்தியப்பிரிவு முன்னாள் உத்தியோகத்தர்)

நல்லூர், அரச வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து அரசபிள்ளை அவர்கள் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - அன்னலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி பார்வதி அம்மா செல்வராசா (கனடா), கணேசமணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரமோகன் (U.K.), சித்திராவின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும் சோதிலிங்கம், நவீனாவின் மாமனாரும் ஸ்ரெவானி, றோசான், நவீன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*46/4, அரச வீதி,*
*நல்லூர்.* (31355) (33-11-18)

தகவல்
அ. யோகேஸ்வரி
மனைவி

## சாவகச்சேரி நகரசபை

# மீள் கேள்வி அறிவித்தல்

01.01.2004ஆம் திகதி முதல் 31.12.2004ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கும் இறுதித் திகதி 28.11.2003 நண்பகல் 12மணிவரை.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 01.12.2003 முற்பகல் 10.00 மணிவரை ஆகும்.

கேள்விகள் 01.12.2003 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

| விவரம் | கடை இல. | கேள்வி வைப்பு ரூ | படிவக் கட்டணம் ரூ பெறுமதி சேர்வரி 20% | ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூ |
|---|---|---|---|---|
| ஆட்டிறைச்சிக்கடை | என் எம் எஸ் 1 | 1000/= | 200/= | 100000/= |
| மாட்டிறைச்சிக்கடை | என் எம் எஸ் 3 | 1000/= | 200/= | 100000/= |

மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
17.11.2003

மு.செ.சரவணபவ
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

(C/31352) (33-16-18)

# மீரிகமவில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் பலி! ஐவருக்கு வாள்வெட்டு!!

மீரிகம பகுதியில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் பலியானார். ஐவருக்கு வாள்வெட்டு விழுந்துள்ளது. மூன்று வீடுகள் உட்பட இரண்டு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. கடை உரிமையாளர் ஒருவருக்கும் வாடிக்கையாளர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதமே இந்த மோதலுக்குக் காரணம் எனத் தெரிய வருகிறது.

கடை உரிமையாளரின் வீடு மற்றும் வியாபார நிலையம் உட்பட மேலும் இரண்டு வீடுகளும் கடையொன்றும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

கலகத்தை அடக்கச் சென்ற பொலீஸார் மீதும் மீரிகம பொலீஸ் நிலையத்தின் மீதும் கலகக்காரர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக மீரிகம பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்கி பீரிஸ் தெரிவித்தார்.

மோதலின்போது கொல்லப்பட்டவர் முகரகம்பொலவைச் சேர்ந்த மஞ்சுல (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாக தப்பான அபிப்பிராயங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடும் என்ற காரணத்தால் சந்திப்பைத் தவிர்த்துள்ளேன்.

என்னுடைய இரண்டு கடிதங்களில் எனது நிலைப்பாட்டை நான் மிகவும் தெளிவாக தெரிவித்துள்ளேன். அதில் ஜனாதிபதி எவ்வாறு செயற்படவேண்டும் என்ற ஆலோசனைகளையும் நான் வழங்கியுள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக அமைச்சரவை நீக்கம், நியமனம், அமைச்சரவைக்கு தலைமை தாங்கும் அதிகாரம் ஆகியவற்றை பிரதமரிடம் விட்டுவிடும்படியும், சகல அதிகாரங்களையும் நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட ஜனாதிபதிபோல் செயற்படாது ஜனநாயகப் பண்புக்கு மதிப்பளித்து பெருந்தன்மையோடு செயற்படவேண்டும் என்பதையும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

-இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு இளைஞர்களைக் கைதுசெய்ய முற்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

அப்போது பஸ்ஸிலிருந்து இறங்கி ஓர் இளைஞர் ஓடினார். மற்றைய இளைஞரைக் கைதுசெய்து ஜீப்பில் ஏற்ற முற்பட்டபோது அருகிலிருந்த இளைஞர்கள் சிலர் ஜீப் மீது கற்களை வீசித் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட இளைஞர் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் எனத் தெரிய வருகிறது. இன்று இவர் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்படுவார் எனத் தெரிகிறது.

## கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் காயம்!

விறகு வெட்டச் சென்ற குடும்பஸ்தரை கரடி துரத்தித் தாக்கியதில் அவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் மாங்குளத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது 52) என்பவரையே கரடி தாக்கியது. படுகாயமடைந்தவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து நேற்றிரவு அம்புலன்ஸ் மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார்.(ஒ-9)

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

ஸ்ரீ.ல.சு.கட்சி, ஜே.வி.பி. கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் அதன் கீழ் ஜே.வி.பிக்கு முப்பது முதல் முப்பத்தியைந்து எம்.பி. ஆசனங்கள் வழங்கலாம் என்றும் ஒரு யோசனை கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. இரு கட்சிகளும் நேற்று கூட்டமைப்பு அரசு ஒன்றை நிறுவினால் அதில் ஜே.வி.பிக்கு அளிக்கப்படக்கூடிய பங்கு பணி குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

நேற்றைய கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உபகுழு நாளை மறுதினம் கூடி அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆராயும் அதேசமயம், அடுத்த நாள் (அதாவது வெள்ளிக்கிழமை அன்று) பொ.ஐ.மு. அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றுகூட்டி, ஜே.வி.பியுடன் கூட்டமைப்பது குறித்து ஆராய்வதென்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது. இதற்கிடையில் ஸ்ரீசுதந்திரக் கட்சியின் மத்தியகுழு நேற்றுக்காலை கூடியது. குழுவின் 48 உறுப்பினர்கள் இதில் பங்குபற்றினர். ஜனாதிபதிக்கும் ஐக்கியதேசிய முன்னணிக்கும் இடையில் இன்று இடம்பெறும் சந்திப்பின் பெறுபேறுகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிப்பது என்று இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டதாக அறியவந்தது.


வெளிவந்துவிட்டது!

LOGIC-II

விஞ்ஞானிகளும் கொள்கைகளும்

ஒழுக்கவியல் கருத்துக்களும்

By: P.கமல்

யாழ். பூபாலசிங்கம்,

ஸ்ரீலங்கா, தர்க்கா,

சுப்பிரமணியம்,

சிதம்பரப்பிள்ளை

(வடமராட்சி)

(24837) (22-11-18)



CHEMISTRY

DIAS B.Sc.(Hons)Sp.in.Chem.

அலகு ரீதியான மீட்டல்

வினா - விடை வகுப்பு

19.11.2003 புதன் 2p.m.

நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(27882)


# நோர்வேயை வெளியே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவும், மாற்றுத் திட்டங்கள் தொடர்பாக நேரடிப் பேச்சுக்களை ஏற்பாடு செய்வதற்குமே நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸனும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இங்கு வந்தனர். ஆனால், அவர்களும் சமாதானப் பணிகளை கைகழுவி விட்டுப் போய்விட்டனர்.

யாரை நம்பி யாருடைய பொறுப்பில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வது? என்று நோர்வே மட்டும் கேட்கவில்லை. சர்வதேச சமூகமுமே இன்று கேள்வி எழுப்புகிறது. இதற்கு ஜனாதிபதியின் பதில் என்ன?

சமாதானப் பணிகளைப் பிரதமர் தொடரவேண்டும். தனது ஆதரவு அதற்கு உண்டு என்கிறார் ஜனாதிபதி. பேச்சு பிரதமரிடமும், பாதுகாப்பு ஜனாதிபதியிடமும் இருக்கும் போது பேச்சுக்களின் பெறுபேறுகளை நடைமுறைப்படுத்துவது யார்? அதற்கான பாதுகாப்பிற்கு யார் பொறுப்பு என்பதை முதலில் ஜனாதிபதி தீர்மானிக்கவேண்டும்.

இன்று அல்லது நாளை மறுநாள் பிரதமர் தனது தோழமைக் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதியைச் சந்தித்து யதார்த்த நிலையை விளக்குவார். பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும்.

நாட்டின் நலன் கருதி சகல கட்சிகளின் பங்களிப்புடன் தேசிய அரசு ஒன்றை அமைக்க வேண்டும் எனகிறார் ஜனாதிபதி. மூன்று அமைச்சுக்களைப் பறித்து, நாடாளுமன்றத்தை இடைநிறுத்துவதற்கு முன் ஜனாதிபதி இதனைச் சிந்தித்திருக்கவேண்டும். தேசிய அரசு பற்றிப் பேசும் முன் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை பெரும்பான்மை ஆதரவு உள்ள அரசிடம் அவர் மீள ஒப்படைக்கவேண்டும்.

சிலவேளை இன்னும் 24மணி நேரத்துக்குள் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து விடலாம் என்று சில தகவல்கள் கிட்டியுள்ளன. இது குறித்து அரசின் நிலை என்ன? என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

நாடாளுமன்றத்தை கலைத்தால் அடுத்தது தேர்தல்தான். எந்தச் சமயத்திலும் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க நாம் தயார் என்றார் அமைச்சர் பீரிஸ்.

மீண்டும் நீங்கள் ஆட்சிக்கு வந்தாலும் ஜனாதிபதி தானே மேலும் இரண்டு வருடங்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருப்பார். அப்போதும் இந்த சிக்கல் ஏற்பட இடமுண்டுதானே என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இப்பொழுதே எம்மிடம் 130 எம்பிக்கள் இருக்கின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்திற்கு இன்னும் 10 ஆசனங்கள் மட்டுமே தேவை. இதை மிகவும் இலகுவாகப் பெற்றுவிடுவோம். அதனைக் கொண்டு நாடாளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதிக்கு பதிலடி கொடுக்க முடியும். ஆனால், நாங்கள் நாடாளுமன்றத்தை கலைக்கும்படியோ தேர்தல் ஒன்றை நடத்தும்படியோ ஜனாதிபதியிடம் கேட்கமாட்டோம் என்று அமைச்சர் பீரிஸ் பதில் அளித்தார்.

மீண்டும் சமாதானப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன் தென்பகுதியில் ஸ்திரமான ஓர் அரசியல் சூழ்நிலையை உருவாக்கவேண்டும். தேசிய நலனில் அக்கறை கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளும், நாட்டு மக்களும் தனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கைக்கு அமைய தேவையான நிதியை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும், திறைசேரி தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள், போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் ஆகிய தரப்பினருடன் நாம் தொடர்ச்சியாக தொடர்புகளை வைத்திருக்கின்றோம்" என்று எரிக் சொல்ஹெய்ம் ஒஸ்லோவை விட்டு இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்னர் தெரிவித்தார்.

"சமாதான முயற்சியை நாம் அப்படியே வைத்திருப்போம். தெற்கில் ஏற்பட்டிருக்கும் அதிகாரப்போட்டி முடிவுக்கு வரும் வரை நாம் செய்யக்கூடியது எதுவுமில்லை" எனவும் அவர் கூறினார்.

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை உள்ளதா? என்று வினவப்பட்டபோது நம்பிக்கையோ, அவ நம்பிக்கையோ கொள்வது மிக மிகக் கடினமானதாகும். அரசியல் ஹேஷ்யம் கூறுவது சாத்தியமற்றதாகும் என்று சொல்ஹெய்ம் பதிலளித்திருக்கிறார்.

தனது விஜயத்தின்போது அவர் இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

## சோதனைச்சாவடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதம் ஒன்றை நேற்று அனுப்பிவைத்துள்ளார். அக்கடிதத்தின் பிரதிகளை பிரதமருக்கும், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கும் அவர் அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

குறிப்பிட்ட சுகாதார நிறுவனங்களின் தேவைகள் குறித்து மக்கள் தெரிவித்த முறைப்பாடுகள் தொடர்பாக நேரில் ஆராய்வதற்காகவே நான் அங்கு சென்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அங்கு சென்று மக்களின் தேவைகள் பற்றி ஆராயும் முழு உரிமை எனக்குண்டு.

அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரம் எனக்கு மறுக்கப்பட்டுள்ளது.

என்னைத் தெரிவுசெய்த மக்களின் தேவைகளுக்காக அரச நிறுவனங்களுக்கு நான் செல்வதற்கு படையினர் தடையாக இருக்கக் கூடாது என்பதைப் படையினருக்குத் தெரிவிக்குமாறு கோருகின்றேன்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-3-5)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்வி நிலையத்தின் 2001ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகைதந்து பரிசில் வழங்கிச் சிறப்பித்த

உயர்திரு. துரைச்சாமி குருநாதசிவம் அவர்கள்

கொழும்பு றோயல் இன்டஸ்றீஸ் தொழில் அதிபரும், யாழ்ப்பாணம் சிவா நறுமணப் பூங்கா உரிமையாளரும், சமூக சேவையாளரும், கொடை வள்ளலும், எமது கிராம வளர்ச்சிக்கும் ஆலய வளர்ச்சிக்கும் பொது அமைப்புகளின் வளர்ச்சிக்கும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் தன்னலமற்ற சேவையாளனுக்கு

6.11.2003இல் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவரை நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். கல்வி நிலையம்

மானிப்பாய் வீதி,

ஆறுகால் மடம். (24812) (11-18)

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



யாழ். - கொழும்பு மினிவான் சேவையில்

ஓராண்டு நிறைவில்



மருதம் ரவல்ஸ்

நெ.ம.ம.வி. வீதி, நெல்லியடி, கரவெட்டி.

ஓராண்டு நிறைவை இனிதாக்கிய வாடிக்கையாளர்களுக்கு நன்றியுடன் கூடிய நல்வாழ்த்துக்கள்!

தங்கள் நல் ஆதரவுக்காக கொழும்பு பயணத்திற்கான ஒவ்வொரு பயணிகளுக்கும் பதிவினை எமது மருதம் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் பதிவுசெய்யும்போது 2004 ஆம் ஆண்டிற்கான அஷ்டலக்சுமி கலண்டர் (தினத்தாள் கலண்டர்) அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலும் இருவழிப்பயணத்திற்கான பதிவிற்கு விசேட கழிவுண்டு.

மருதம் தொலைத்தொடர்பகம்

நெ.ம.ம.வி. வீதி,

நெல்லியடி, கரவெட்டி. (சி-31348) (24-11-18)

021 2263210, 021 2263195, 060 2212229

0777 550966, 0777 550967, 0777 550968


## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் வரதராஜேஸ்வரக் குருக்கள்

சுன்னாகம், மயிலணி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு ச.வரதராஜேஸ்வரக்குருக்கள் நேற்று(17.11.2003) திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் சரோஜினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சர்வேஸ்வரக்குருக்கள் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமசாமிக்குருக்கள் - ஆனந்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் உமாசுதசர்மா, உமா ஆகியோரின் அன்புத் தந்தையும் உருக்குமணிதேவி, லலிதாம்பாள், சண்முகானந்தக்குருக்கள், பிரணதார்த்திகரசர்மா, ஜனாகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.11.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மயிலணி,

சுன்னாகம். (சி-31356) (22-11-18)

வ.உமாசுதசர்மா (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.